
Book 2

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், மாறியவர்களாயினும் (ஸாபியீன்கள்) யார் இறைவனின் மீதும், இறுதி தீர்ப்பு நாள் மீதும் நம்பிக்கை கொண்டு. நற்செயல் செய்து வருகிறார்களோ அவர்களின் கூலி, அவர்கள் இறைவனிடத்தில் உண்டு. அவர்கள் அச்சப்படதேவையில்லை,துக்கப்படவும் மாட்டார்கள்.

அல் - குர்ஆன் 2 : 62, 5 : 69




அக்டோபர்
1999
OCTOBER

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# கண்ணியம் இறைவனுக்கே!

இந்த இதழில் இறைவனைக் குறிப்பிடும் எல்லா இடங்களிலும்' அவன்' என்ற சொல்லுக்கு பதிலாக' அவர்' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.

'அவன்', 'அவர்', என்ற இரண்டு சொற்களும் ஒருமையாக இருப்பினும் கண்ணியமானவர்களை, உதாரணமாக நபிமார்களை மகான்களை, ஆசிரியர்களை, தந்தையை, மற்றும் மரியாதைக் குரிய அனைவரையும் குறிப்பதற்கு 'அவர்' என்ற சொல்லையே நாம் பயன்படுத்துகிறோம்.

ஆனால் எல்லா வல்லமையும், கண்ணியமும் மிக்க இறைவனைக் குறிப்பிடும்போது கண்ணியமற்றவர்களைக் குறிப்பிடும்' அவன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம்.'

'அவன்' என்ற சொல் மட்டுமே ஒருமையைக் குறிக்கும் என்று வாதிடுபவர்கள் மேலே கூறப்பட்ட மரியாதைக் குரியவர்களை' அவன்' என்ற சொல்லால் அழைப்பார்களா?

நம் இஸ்லாமிய புத்தகங்களில் ஷைத்தான்களை, வழிகேடர்களை மற்றும் கண்ணியக் குறைவானவர்களைக் குறிப்பிட 'அவன்' என்ற சொல்லையே உபயோகப்படுத்துகிறோம். இத்தகைய சொல்லால் கண்ணியம் மிகுந்த இறைவனை அழைக்கலாமா?

"அறிந்து கொள்க! கண்ணியம் எல்லாம் அல்லாஹ்வுக்கு உரியது." (35:10) என்ற வசனத்தின் அடிப்படையில்' அவன்', என்று குறிப்பதை விட' அவர்' என்று குறிப்பது சிறந்தது, கண்ணியமிக்கது.

குறிப்பு: குர்ஆன் வசனங்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டே நமது இதழில் அனைத்து ஆக்கங்களும் அமையும். வாசகர்கள் இதில் குறிப்பிட்டிருக்கும் வசனங்களை, தங்களிடமுள்ள எந்த ஒரு குர்ஆன் மொழிபெயர்ப்பிலும் ஒத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 1

அக்டோபர்1999
நினைவு 2

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர்

C.S. ரஃபியுதீன்

துனை ஆசிரியர்கள்:

N.A. அஹமது ஹுஸேன்

K. முஹமது ஷரீப் மஜாஹிரி

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

## இதழின் உள்ளே

1. வரம்பு மீறாதீர்!
2. இறைவனின் மகத்துவம்.
3. உலகளாவிய ஒற்றுமை.
4. இஸ்லாம் என்பது மதம் அல்ல?
5. இறைவனுக்கு கட்டுப்படுங்கள்! தூதருக்கு கட்டுப்படுங்கள்!
6. வாழ்வின் இரகசியங்கள்!
7. இறைவனின் முத்திரை-19.
8. குர்ஆன் மட்டும் போதாதா?
9. SATAN-THE MASTER HYPNOTIST
10. GREATNESS OF GOD
11. பூமி தட்டையானது!
12. குர்ஆன் கூறும் மெய்ப்பிக்கும்தூதர்

**தலையங்கம் :**

# வரம்பு மீறாதீர்

இறைவன் அருளிய சத்திய மார்க்கத்தை, இறைவேதத்தை, தூதர்களும், இறைவனுக்கு மெய்யாகவே கீழ்ப்படிந்து நடப்பவர்களும், மக்களுக்கு எடுத்துச் சொல்லும் போது அன்றும் சரி, இன்றும் சரி, இறைவனுக்கு இணை வைத்து, அவ்வாறு இணை வைக்கிறோம். என்பதைக் கூட அறியாமல் வணங்குபவர்கள் இழிவாகப் பேசுவதும் துன்புறுத்துவதும், பிரசாரத்தை தடுப்பதும், மார்க்கத்துக்கு எதிரானவர்கள் போன்று அவர்கள் மீது பொய்யான அவதூறுகளைக் கூறுவதும், சூழ்ச்சிகள் செய்வதும் வீடுகளை விட்டு வெளியேற்றுவதும் (22:40) வழமையான ஒன்றே என்பதைக் குர் ஆனைப் படிப்பவர்கள் நன்கு அறிந்துகொள்ள முடியும்.(36:13-27, 7: 59-93, 21:36)

இன்று பாரம்பரிய நம்பிக்கைகளை அதிகம் வலியுறுத்தக் கூடியவர்கள், அதையே பிழைப்பாக ஆக்கிக் கொண்டவர்கள், இறைவேதத்தை மட்டும் பின்பற்றி வாழ வேண்டும் என்று கூறுபவர்கள் மீது பொய்யான அவதூறுகளைக் கூறி, அவர்கள் மீது வெறுப்பையும், களங்கத்தையும், மக்களிடையே ஏற்படுத்துவதை நம்மிடையே உள்ள நல்ல எண்ணம் கொண்ட நடுநிலையாளர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இறைவன் இறக்கிய வேதமே பொய்யையும், மெய்யையும், பிரித்து அறிவிக்க கூடியதாகவும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதாகவும், நேர்வழியில் இருப்பவர்கள் யார், வழிகேடர்கள் யார் என்பதை காட்டிக் கொடுக்கக் கூடியதாகவும் உள்ளது. நாம இறைவன் மீது முழு நம்பிக்கை கொண்டு சத்தியத்தை அறிந்து அதன்படி நடக்க முயற்சி செய்வோம்.

இறைவனுக்கு இணைவைக்காது, கலப்பற்ற உள்ளத்துடன் கீழ்படிந்து நடக்கக் கூடியவர்களுக்கும் சத்தியத்தைத் துணிவோடு எடுத்துச் சொல்லக் கூடியவர்களுக்கும்' அவர்கள் அச்சப்படவோ, துக்கப்படவோ, தேவையில்லை, (2:112, 2:277, 5:69, 6:48) அவர்களை நாம் பாதுகாப்போம் அவர்களுக்கு நல்ல இருப்பிடத்தையும் (3:172) வளமான வாழ்வையும் இவ்வுலகிலும், மறுஉலகிலும், வழங்குவோம் (3:100,111,125,126) என்று இறைவன் வாக்குறுதி அளிக்கின்றார்.

யார்வரம்பு மீறுகிறார்களோ, இறைவனுக்கு எதிராக சூழ்ச்சி செய்கிறார்களோ அவர்கள் மீது இறைவன் சாபமும், தண்டனையும் உண்டாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

"மேலும் எத்தனையோ நபிமார்களும், அவர்களுடன் இறையடியார்களும் இறைவனின் பாதையில் போர் செய்தனர். இறைவனின் பாதையில் அவர்களுக்கு ஏற்பட்ட துண்பங்களால் தைரியம் இழந்து விடவில்லை. தயங்கவும்இல்லை, எதிரிகளுக்கு, பணிந்து விடவுமில்லை இறைவன் இத்தகைய பொறுமையாளர்களை நேசிக்கிறார்"(3:146)

# இறைவனின் மகத்துவம்

தமிழாக்கம் : உமர் முக்தார்

வசனம் (39:67) லிருந்து இறைவன் "மகா" பெரியவர் என்பதையும், மனித அனுமானங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராக இருக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ளலாம் . மேலும் இந்த வசனத்தில்- ஏழு பிரபஞ்சங்களை இறைவன் தன் கைகளில் சுருட்டி வைத்திருக்கிறார் என்றும் புலனாகிறது.

சந்தேகத்திற்கிடமற்ற குர் ஆனின், கணித கட்டமைப்பின் ஆதாரத்தின் அடிப்படையில் நமக்கு கற்பிக்கப்படுவது என்னவென்றால், நம்முடைய பிரபஞ்சம்தான் இருக்கின்ற ஏழு பிரபஞ்சங்களில் சிறியதும் உள்ளுக்குள் இருப்பதும் ஆகும். (41:12, 55:33, 67:5, 72:8-12)ல் காண்க . மனித குலத்தின் முன்னேறிய விஞ்ஞானங்கள் நமக்கு காண்பிக்கின்ற உண்மை என்னவெனில், நம்முடைய "காலக்ஸி" (நட்சத்திர மண்டலம்) "பால்வழி மண்டலம்" (Milky Way) ஆகும் . இப்பால்வழி மண்டலத்தின் குறுக்கு விட்டம் "(100,000) ஒரு லட்சம் ஒளி வருடங்கள்* ஆகும் . நம்முடைய பிரபஞ்சத்தில் இப்படிப்பட்ட பில்லியன் * * காலக்ஸிகள் இருக்கின்றன . பில்லியன் டிரில்லியன் ** (கோடானு கோடி) நட்சத்திரங்கள் உள்ளன எண்ணவே முடியாத அளவு கோள்களும் கிரகங்களும் மிதந்து கொண்டிருக்கின்றன.

நமது பிரபஞ்சத்தின் அளவு 20,000 மில்லியன் **** ஒளி வருடங்களுக்கும் அதிகமானது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## நட்சத்திரங்களை எண்ணுவோம் !

இருப்பதில் குயின்டில்லியன் அளவு (1000 000 000 000 000 000) (மில்லியன் x மில்லியன் x மில்லியன்) நட்சத்திரங்களை மட்டும் நாம் எண்ணுவதாக வைத்துக் கொண்டால், ஒரு நொடிக்கு ஒன்று வீதம் நட்சத்திரங்களை எண்ணுவோமானால் - இரவு பகலாக நாம் எண்ணி கொண்டிருந்தாலும் அவற்றை எண்ணி முடிப்பதற்கு 3 2 பில்லியன் ஆண்டுகள் ஆகிவிடும்! இது பிரபஞ்சத்தின் (Universe) வயதை விட அதிகமாகும்) அனைத்தையும் எண்ணுவதற்கே இவ்வளவு காலம் ஆகிவிடும்! ஆனால் இறைவனோ அவற்றை படைத்துள்ளார். இதிலிருந்து படைத்த இறைவனின் மகத்தான தன்மையை உணரமுடியும்

நாம் ஒரு விண்வெளி ஆய்வுப் பயணத்தை மேற்கொள்வதாக கற்பனை செய்து கொண்டால் நமது பிரபஞ்சத்தின் பிரம்மாண்ட அளவினை ஓரளவுக்கு மதிப்பீடு செய்ய இயலும். நாம் ஒரு விண்கலத்தில் பூமியிலிருந்து சூரியனை நோக்கி செல்வோமென்றால்,

ஒளியின் வேகத்தில் தொடர்ந்து பயணித்தால் நம்முடைய காலக்ஸியின் விளிம்பினை நாம் அடைவதற்கு 50 ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிடும். நமது பால் வழி மண்டலத்தின் வெளி வளையத்தில் நின்று நாம் பார்த்தால் நமது பூமி கிரகம் காணமுடியாதபடி குறுகிப் போய்விட்டதை அறியலாம். அங்கிருந்து மிகவும் சக்திவாய்ந்த பெரிய தொலைநோக்கி (Telescope) யில் கூட பூமியைப் பார்க்க இயலாது அவ்வளவு சிறியதாக நமது பூமி இருக்கிறது.

நமது பக்கத்து வீடாக இருக்கும் "காலக்ஸிக்கு" நாம் சென்றடைய ஒளியின் வேகத்தில் பயணிக்கிறோம், என்றாலும் இரண்டு மில்லியன்' ஆண்டுகள் ஆகிவிடும். நம்முடைய காலக்ஸியின், விளிம்பை எட்டுவதற்கே இவ்வளவு காலம் ஆகிவிடும். நம்முடைய பிரபஞ்சத்தின் விளிம்பை எட்டுவதற்கோ 10,000 மில்லியன் ஆண்டுகள் ஆகிவிடும். நம்முடைய பிரபஞ்சத்தின் வெளி விளிம்பில் நின்று பார்த்தால் பால் வழி மண்டலமே ஒரு பெரிய அறையில் கிடக்கின்ற மிகச்சிறிய தூசியாகத்தான் இருக்கும்.

நம்முடைய பிரபஞ்சத்தை சூழ்ந்து மேற்கட்டாக இரண்டாவது பிரபஞ்சம் அமைந்துள்ளது. மூன்றாவது பிரபஞ்சம் இரண்டாவதை விட பெரியது. இப்படியே ஒவ்வொரு பிரபஞ்சமாக ஒன்றைச் சுற்றி ஒன்றாக ஏழு பிரபஞ்சங்கள் அமைந்துள்ளன. உண்மையில் ஒரே தொகுப்பாக ஒன்றைச் சுற்றிலும் ஒன்றாக அமைந்துள்ள ஏழு பிரபஞ்சங்களில் மிகவும் சிறியதும் நடுவில் இருப்பதுமாக நமது பிரபஞ்சம் அமைந்துள்ளது. இதன் மூலம் நாம் நமது பிரபஞ்சங்களின் பிரம்மாண்டமான தன்மையை அறிந்துகொள்ள முடிகிறது. கடைசியாக வெளி வளையமாகவுள்ள முதல் பிரபஞ்சத்தின் சுற்றளவினை நாம் கற்பனையாகக் கூட எண்ணிப்பார்க்க இயலவில்லை, இந்த பிரம்மாண்டமான அளவுகள் எல்லாம் இறைவனின் கைபிடிக்குள் இருக்கின்றது. வெளி பிரபஞ்சத்தின் வெளிவளையத்திலிருந்து பார்த்தால் எங்கே இருக்கிறது? பூமி காணாமல் போய்விட்ட துகள்தான்! இத்துணை மிகச்சிறிய பூமியில் உட்படைப்பாக இன்னும் மிகச் சிறிய படைப்பினங்களான மேரி, ஏசு, முகம்மது, கிருஷ்ணர், புத்தர், மஹாவீர், ஆகியோர் வாழ்ந்து மறைந்தனர். இவ்வளவுக்கும் பிறகும் கூட சில மக்கள் எந்த சக்தியுமற்ற இவர்களை கடவுளர்களாக ஏற்படுத்திக் கொண்டார்கள். இறைவனுடைய மகா பிரம்மாண்டத் தண்மையானது அவரது கைப்பிடிக்குள் ஏழு பிரபஞ்சங்களையும் வைத்திருக்கின்றார் என்பது மட்டுமல்லாது இவை அனைத்திலும் முள்ள ஒவ்வொரு அணுக்களையும், அணுத்துகள்களையும், பிரபஞ்ச முழுமையையும் தனது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளார். (6:59, 10:61. 34:3)

Dr.ரஷாத்கலீபா அவர்களின் குர் ஆன் மொழிபெயர்ப்பின்
முன்னுரையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

# உலகளாவிய ஒற்றுமை

தொகுப்பு :- K.S. அபுபக்கர் சித்தீக்

இந்தியாவில் ஹிந்துக்களும் சீக்கியர்களும், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். அயர்லாந்து நாட்டில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களும், பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களும் ஒருவரோடு ஒருவர் சண்டையிடுகிறார்கள். ஈரானிலும், ஈராக்கிலும் ஷியா பிரிவினரும், சுன்னத் பிரிவினரும் சண்டையிடுகிறார்கள். ஜெரு சலேமில் யூதர்களும், முஸ்லீம்களும் சன்டையிடுகிறார்கள். இத்தகைய ஒழுங்கீனமே லெபனானிலும் நடைபெறுவதாக நாம் அறிகிறோம். உலகம் முழுவதும் இதுபோன்ற போர் அவலங்கள் அதிகமாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது . இவ்வாறு தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் பிரிவுகள் அனைத்திற்கும் இடையே "ஒரு பொதுவான கருத்து ஒற்றுமை" இருக்கவே செய்கிறது. அது யாதெனில்" அம்மக்கள் அனைவருமே கடவுளை நம்புகிறார்கள்." சீக்கியர்களும் கடவுளை நம்புகிறார்கள். யூதர்களும் கடவுளை நம்புகிறார்கள், முஸ்லிம்களும் கடவுளை நம்புகிறார்கள், புத்த மதத்தை சார்ந்தவர்களும் கடவுளை நம்புகிறார்கள். ஜஹேவா விட்னஸ் பிரிவினரும், கிறிஸ்தவர்களும், ஹிந்துக்களும் ஏனைய எல்லா தரப்பு மக்களும் கடவுளை நம்புகிறார்கள்.

இந்நிலையில் அவர்களுக்கு இடையில் இருந்து வருகின்ற இந்த கருத்து ஒற்றுமையை அகற்றி அவர்களில் ஒருவருக்கொருவரை கசப்பான எதிரிகளாக மாற்றியது எது? உயர்ந்த கல்வியும், எதையும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய நுண்ணறிவும் கொண்ட இன்றைய தலைமுறையினர் ஆன நாம் நிச்சயமாக அவர்களுக்கு இடையில் நடைபெறும் இந்த சண்டைகளுக்கான காரணத்தை தெளிவாக கண்டு உணர்ந்து அந்த சண்டைகளை போக்குவதற்கான வழியை காண வேண்டும். அதாவது அவர்களுக்கு இடையே நடக்கும் சண்டைகளுக்கு காரணமாக இருக்கும் அற்பமான வேறுபாடுகளை விட்டும் விலகி வெளிப்படையாக அவர்களுக்கு இடையே இருக்கும் இறைவனை நம்புகின்ற பொதுவிஷயத்தின் பக்கம் அவர்களுடைய கவனத்தை திருப்பினால் நாம் தேவையற்ற இந்த சண்டைகளை நிச்சயமாக அகற்ற முடியும்.

இந்தப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வை இறைவன் தனது கடைசி வேதமான குர் ஆனில் அதன் அத்தியாயம் (3:64)ல் தெளிவுபடுத்துகிறார். அந்த வசனம் வருமாறு: வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்கும் இடையே ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள். நாம் இறைவனை தவிர வேறு எவரையும் வணங்க மாட்டோம். இறைவனை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக் கொள்ள மாட்டோம். எனக் கூறும் அவர்கள் புறக்கணித்துவிட்டால் "நிச்சயமாக நாங்கள் அர்ப்பணித்தவர்கள் விசுவாசிகள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்" என்று நீங்கள் கூறிவிடுங்கள்.

இன்று உலகில் மக்கள் குறிப்பிட்ட சில மனிதர்களை காரணமாக கொண்டே தங்களுக்குள் சண்டையிடுகிறார்கள். இம்மக்கள் அனைவரும் இறைவனை நம்புவர்களாக இருக்கும் நிலையில் அவர்களுடைய ஒற்றுமையை குலைத்து அவர்களுக்குள் பிரிவினை ஏற்படுவதற்கு அவர்கள் அந்த சில, மனிதர்கள் மீது கொண்டிருக்கும் பற்றே காரணம் ஆகும். உதாரணத்திற்கு இயேசு, மேரி, முகம்மது, புத்தர், ஜோசப் ஸ்மித், சாய்பாபா மற்றும் பலரை சொல்லாம். மக்கள் தனித் தனி பிரிவுகளாக பிரிந்து, ஒவ்வொரு பிரிவினரும் (அவர்களது கொள்கை அடிப்படையில்) ஒரே எண்ணத்துடன் கூடி சில மனிதர்களை (அவரவர் தேர்ந்து எடுத்துக் கொண்ட படி) கடவுளுக்கு இணையாக ஏற்படுத்தி வணங்குபவர்களாயினர், இதன் காரணமாகவே அவர்கள் பல பிரிவினர்களானார்கள் மேலும் என்னுடைய இணையாளர் உன்னுடைய இணையாளரை விட சிறந்தவர், என்கிற அடிப்படையில் பிரிவினையை ஏற்படுத்தி அதன்காரணமாக ஒருவர் மற்றவர் மீது பகைமை பாராட்டலானார்கள்.

இந்த காரணங்களால் உண்மையிலேயே அவர்களை ஒருங்கிணைக்கக் கூடிய அந்த" பொது பாதுவான கருத்து ஒற்றுமை" யாகிய இறைவனை நம்புகிற செயலை; தன்மையை மறந்துவிட்டார்கள். அவர்களை படைத்தவரை, அவர்களுக்கு உணவளிக்கின்றவரை, அவர்கள் உயிர்கள் மீது ஆட்சி செலுத்துபவரை, மேலும் மரணத்தபின் மீண்டும் அவர்களை உயிர்ப்பிப் பவரை (30:40) அந்த ஒரே இறைவனை மறந்துவிட்டார்கள். அவரவர் தங்கள் விருப்பபடி தேர்ந்தெடுத்துக் கொண்ட மனிதர்கள் மீது கொண்ட அன்பு, நம்பிக்கை, பக்தி, குருட்டுப்பற்று, ஆர்வம் முதலான காரணங்களால் பிரிந்து கிடக்கிறார்கள்.

இது மட்டுமில்லாமல் இறந்தவர்கள் மீதும், எவ்வித சக்தியும் அற்றவர்கள் மீதும், இவர்களுக்கு எந்த வகையிலும், உதவிசெய்ய இயலாதவர்கள் மீதும், இவர்கள் கொண்டபற்றும் நம்பிக்கையும் மேலும் பல பிரிவுகளையும், அவர்களுக்கு இடையில் பகையையும் அதன் காரணமாக போரும், சண்டையும் ஏற்பட காரணமாயின. மேலும் மிக முக்கியமாக, இவர்களுடைய இத்தகைய செயல்களினால் அதாவது மனிதர்கள் மீது இவர்களுக்குள்ள பற்று, அவர்கள் கடவுளுக்கு கீழ்படிய மறுக்கக் காரணமாகி விடுகிறது. மேலும் இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களுடைய, செயல்பாடுகள் இவர்களது செயல்களுக்கு முற்றிலும் மாற்றமானதாக இருந்தது. என்ற அடிப்படை உண்மையைக் கூட இவர்கள் புரிந்து கொள்ளாத காரணத்தினால், இவர்களால் வணங்கப்படும் மனித இனையாளாளர்களாகிய இயேசு, மேரி, முகம்மது மற்றும் நேர்வழியில் நடந்த இமாம்கள், தலைவர்களுக்கும், கூட இவர்கள் கீழ்படியவில்லை என்பதையே விளக்குகிறது.

ஆகையால் நாம் அனைவரும் சகோதர சகோதரிகள் என்ற அடிப்படையில் நம் அனைவருக்கும் இடையிலே உள்ள பொதுவான கருத்து ஒற்றுமையாகிய இறைவனை நம்புகிற விஷயத்தில் நம்முடைய முழு கவனத்தையும் செலுத்தினால் அதாவது "நம் உண்மையான அன்பும், நம்முடைய இலக்கும் நம்மைப் படைத்தவருக்கு மட்டுமே" என்ற நிலை ஏற்பட்டால் சந்தேகமில்லாமல்

நிச்சயமாக நாம் ஒன்றுபட்டு விடுவோம், நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிடும். இது உறுதி, முதல் கட்டளையாக பைபிளிலும் (பழைய மற்றும் புதிய ஏற்பாடு இரண்டிலும்) மேலும் குர்ஆன் முழுவதிலுமாக போதிக்கப் பட்டுள்ளபடி நம்முடைய உண்மையான அன்பு இறைவனுக்கு மட்டுமே என்றிருந்தால் நம்முடைய ஒத்த கருத்தாகிய இறைவனை வணங்குவதிலும், அவர்மீது அன்பு செலுத்துவதிலும் நாம் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் உதவி செய்து கொள்ள முடியும். ஒரே கடவுள் என்னும் அடிப்படையே நிச்சயமாக நம்மை ஒன்று சேர்க்கும், சண்டைகளையும், போர்களையும் நம்மை விட்டு நீக்கும் ஆகையால் உலகளாவிய ஒற்றுமை என்பது கடவுளை மட்டுமே நம்புவதாலேயே (விசுவாசங்கொள்வதாலேயே) ஏற்படும். இதைத்தான் இறைவனின் கடைசி வேதமான குர்ஆனின் அத்தியாயம் 3ன் வசனம் 64ம் உலகளாவிய ஒற்றுமையை ஏற்படுத்தி, போர்களை விட்டு விலகும்படி நமக்கு அறிவுறுத்துகிறது. ஆகையால் கடவுளை நம்பக்கூடிய எல்லா மக்களிடமும் சொல்லுங்கள். "வாருங்கள் உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு நியாயமான கருத்து ஒற்றுமையில் ஒன்று சேர்வோம்"

இறைவனை தவிர வேறு எதையும் (எவரையும்) வணங்க மாட்டோம்.

இறைவனுக்கு இணையாக எதையும் அல்லது எவரையும் ஏற்படுத்த மாட்டோம்.

இறைவனுடன் வேறு எந்த மனிதர்களையும் கடவுளர்களாக கருத மாட்டோம்..

இந்த ஒப்பந்தத்தை அவர்கள் நிராகரித்தால் அவர்களிடம் நாங்கள் அற்பணித்தவர்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள் என்று கூறிவிடுங்கள்.

# இஸ்லாம் என்பது மதம் அல்ல !!

C.S. ரஃபியுத்தீன்

இன்றைய உலகில் உள்ள முஸ்லிமல்லாதவர்கள் பெரும்பாலோர் அல்லாஹ் என்பது முஸ்லிம்கள் வணங்கும் கடவுளின் பெயர் என்றும், குர் ஆன் என்பது அவர்களுக்கு மட்டுமே உரிய வேதம் என்றும் இஸ்லாம் என்றால் 1400 வருடங்களுக்கு முன் அரேபியாவிலிருந்து வந்து இங்கு காலூன்றிய ஒரு மதம் என்றுமே கருதுகின்றனர்.

அல்லாஹ் என்பது முஸ்லிம்களுக்கு மட்டுமே உரிய கடவுளின் பெயரல்ல மனிதர்கள் அனைவரும் அறிந்த, வானம் பூமி ஆகியவற்றைப் படைத்து, காத்து வரும், அனைத்திற்கும் ஆற்றலுடைய ஒரே இறைவனைக் குறிக்கும் அரபுச் சொல்லே அல்லாஹ் ஆகும். (பார்க்க அல்குர்ஆன் 29:61,63- 21:56, 19:67, 23:84-89)

மனிதர்கள் அனைவரையும் படைத்து அவர்கள் தன்னை மட்டுமே வணங்கக் கூடியவர்களாக இருக்கிறார்களா என்பதைச் சோதிக்க பூமிக்கு அனுப்பிய கடவுள் (67:2,7:172, 36:60) அவர்களுக்கு வழிகாட்ட சில மனிதர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் வேதங்களைத் அருளினார். (2:213, 2:38-39) இன்று உலகில் பற்பல மதத்தவர்கள் வைத்திருக்கும் அனைத்து வேதங்களும் உலகைப் படைத்த கடவுளிடமிருந்து அருளப்பட்டதே (21:24-25, 46:30) ஒரு வேதம் சிதைக்கப்பட்ட பின் மற்றொரு வேதத்தை இறைவன் உலகிற்கு அருளி வந்தார். (2:146, 3:78) இந்த வரிசையில் இறுதியாக வந்ததே அல்குர் ஆன் ஆகும்.

இஸ்லாம் என்றால், இன்று முஸ்லிம்கள் என்று தங்களைக் கூறிக் கொள்வோர் பின்பற்றும் மதம் என்பதும் தவறே ஆகும். இஸ்லாம்' என்ற வார்த்தைக்கு அர்ப்பணித்தல் என்பதே பொருள். இறைவனுக்கு தன்னை அர்பணித்து அவர் சட்டங்களை ஏற்று கொள்பவரே" அர்ப்பணித்தவர்" (முஸ்லிம்) ஆவார். (3:83, 2:112, 135, 136, 3:18-20)இறைவனுக்குக் அர்ப்பணிப்பது என்றால் அவரைமட்டுமே வணங்குவதும், தர்மத்தின் வழி நடப்பதும், நல்ல மனிதராக வாழ்வதுமே ஆகும். (2:177) இதையே இறைவன் எல்லா வேதங்களிலும் கூறியுள்ளார். நல்லது, தீயது, இரண்டையும் அடையாளம் காட்ட மனசாட்சி என்னும் தராசையும் இறைவன் மனிதர்களுக்குத் தந்திருக்கிறார். (91:8, 55:7, 30:30) இறைவனை அடையும் நேர்வழியும் அது அல்லாத தவறான வழியும் மனிதனுக்குக் காட்டப்படும்போது யார் இறைவனை அடையும் வழியைத் தேர்ந்தெடுக்கிறாரோ அவரே இறைவனுக்குக் தன்னை "அர்பணித்தவர்" ஆவார். (16:9, 92:12, 73:19).

ஓரிறைக் கொள்கையை வேதங்கள் அனைத்தும் ஆணித்தரமாகச் சொன்னாலும் அவற்றைப் பின்பற்றுவதாகக் கூறுவோர் அனைவரும் வெவ்வேறு விதங்களில் இறைவனுக்கு மனிதர்களை இணையாக ஆக்கி நேசித்தும் பூஜித்தும் வருகின்றனர்.

பழைய ஏற்பாடு 6:45, புதிய ஏற்பாடு, லூக் 12:29-30 ஆகியவற்றில் இறைவன் ஒருவர் மட்டுமே என்றும், அவரை மட்டுமே வணங்க வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தாலும், பழைய ஏற்பாட்டைப் பின்பற்றும் யூதர்கள் உஜைரை (நணசய) வணங்கி வருகின்றனர். புதிய ஏற்பாட்டைப் பின்பற்றும் கிறித்துவர்கள் இயேசுவை வணங்கி வருகின்றனர். (9:30)

இந்துக்களின் காயத்ரி மந்திரமும், பற்பல உபநிஷத்களும் சித்தர் பாடல்களும் கூட அனைத்தையும் படைத்து ஆட்சி செய்யும் கடவுள் ஒருவரே என்று கூறுகின்றன. அவர் மட்டுமே வணக்கத்திற்குத் தகுதியானவர் என்று அவை தெளிவாகக் கூறினாலும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் பற்பலவற்றை கடவுளாக எண்ணி வணங்கி வருகிறார்கள். இவ்வாறே இறுதி வேதமாகிய திருக்குர் ஆனை பெற்ற சமுதாயமும் வேதத்தை புறக்கணித்து விட்டு அதற்கு விளக்கமாக தங்கள் முன்னோர்கள் தந்த செய்திகளை

(ஹதீஸ்கள் என்ற பெயரில்) அவை வேதத்திற்கு முரணாக இருப்பினும் முன்னோர்கள் மீது குருட்டு நம்பிக்கை வைத்து அவற்றைப் பின்பற்றுகின்றனர். 2:170.

தவிர ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற செய்தி மனித குலத்திற்குப் புதிய ஒன்றல்ல. எல்லா மதத்தினரும் தாங்கள் வணங்குவது, அனைத்தையும் படைத்த இறைவனையே என்றே கூறுவர்.

ஆயினும் தாங்கள் நேசிக்கும், பூஜிக்கும் (Commemorate) உயர்ந்த மனிதர்கள், இறைத்தூதர்கள் தங்களை அந்த ஒரே கடவுளின் அருகில் நெருங்க உதவி செய்வார்கள் என்று நம்பியே அவர்களையும் கடவுளுடன் இணைத்து வணங்கி வருகின்றனர்.

மேலும் விஞ்ஞானம் என்ற அறிவு ரீதியான அணுகு முறையிலும் ஓரிறைக் கொள்கைக்கான ஆதாரங்கள் கிடைத்தே வருகின்றன. விஞ்ஞானி ஐன்ஸ்டீன் "பிரபஞ்சங்களின் ஒருமை பாட்டில் தன்னைக் காட்டிக் கொள்ளும் கடவுளை நான் நம்புகிறேன்" என்றார். தவிர கோடானு கோடி வருடங்களாக ஒரே ஒரு திட்டத்தின் கீழ் அணுப்பிசகாமல் இப்பிரபஞ்சம் இயங்கி வருவது ஒரே இறைவன் தான் இப்பிரபஞ்சங்களின் அதிபதி என்பதற்கான சான்றாகும். 17:42, 23:91, என்று வேதம் கூறுகிறது.

கடவுள் இல்லை என்று கூறும் நாத்திகர்கள் கூட தங்கள் வாழ்வு தங்களையும் மீறிய ஒரு சக்தியால் கட்டுபடுத்தப்படுவதை உணரவே செய்வர். இப்பிரபஞ்சத்தைக் கண்ணுக்குத் தெரியாத புலனுக்கெட்டாத சக்தி இயக்கி வருகிறது. என்பதை அவர்களும் ஒப்புக் கொள்ள வேண்டிய மறுக்க இயலாத உண்மையாக இருக்கிறது. (23:85)

இவ்வாறு தெள்ளத்தெளிவாக முந்திய வேதங்களிலும் அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையிலும், மனசாட்சியின் குரல் மூலமாகவும் மற்ற படைப்புகளின் மூலமாகவும் அந்த "ஒரே கடவுள" தன்னை வெளிப்படுத்தி தான் மட்டுமே வணக்கத்திற்கும், பூஜிப்பிற்கும் தகுதியானவர் என்று நிரூபிக்கிறார். ஆயினும் மனிதர்கள் இணையே இல்லாத, எந்த உவமையும் சொல்ல முடியாத சர்வ வல்லமையுடைய தங்கள் இறைவனுக்கு தங்களைப் போன்ற மனிதர்களையோ, மற்ற படைப்பினங்களையோ இணைவைத்தே வணங்கி வருகிறார்கள்.

இது ஏன் தெரியுமா? அவர்கள் அளப்பெரும் கருணையாளரான இறைவன் மேல் நம்பிக்கை இழந்து விட்டதும் தங்கள் செயல்களை சீர்திருத்தி இறைவனுக்கு கீழ்படியத் தயாராக இல்லாததும்தான் (29:23, 12:87, 15:56, 39:53-60) தத்தம் மனோ இச்சைப்படி வாழ்வை அமைத்துக் கொண்டு தங்களைத் திருத்திக் கொள்ளாமலேயே சுவனம் நுழைந்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். (2:9, 4:142.)

இதில் மேலும் சிக்கலான விஷயம் என்னவென்றால் ஒவ்வொரு மதத்தவரும் தங்கள் மதத்தைப் பின்பற்றுவோர் மட்டுமே இறைவனின் கருணையைப் பெற்று சுவனம் நுழைய முடியும் என்றும் எண்ணுகிறார்கள். இறைவனின் கருணையை இவர்கள் பங்கிடுவது போல், யூதன் மட்டுமே

சுவனம் செல்ல முடியும் என்று யூதர்களும், கிருத்துவர்கள் மட்டுமே கவனம் செல்ல முடியும் என்று கிருத்துவர்களும் கூறுகிறார்கள். மற்றும் இந்துக்களும், முஸ்லிம்களும் தாங்கள் மட்டுமே சுவனம் செல்ல முடியும் என்று நம்புகிறார்கள் . தத்தம் மதக் கொள்கையை ஏற்று அதில் கூறப்பட்டுள்ள வணக்கவழிபாட்டு முறைகள், பூஜை புனஸ்காரங்கள் ஆகியவற்றை மட்டும் செய்தால் போதும். இறைவனின் கருணை தங்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்றே ஒவ்வொரு மதத்தவரும், மதப்பிரிவினரும் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இறைவன் தான் இறக்கி அருளிய இறுதி வேதத்தில் கூறுகிறார்; "யூதர்கள் கிருத்துவர்கள் தவிர வேறு யாரும் கவனம் நுழைய மாட்டார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். இது அவர்களின் வீண் ஆசையே ஆகும் நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்கள் சான்றுகளைக் கொண்டு வாருங்கள் என்று கூறுவீராக! அப்படியல்ல எவன் இறைவனுக்கு கீழ்படிந்து! நற்கருமங்களை செய்கிறானோ அவனுடைய நற்கூலி அவனுடைய இறைவனிடம் உண்டு. இத்தகையோர் அச்ப்சபட தேவையில்லை, துக்கப்படவும் மாட்டார்கள். குர்ஆன் 6:112-113.

இவ்வசனத்தில் இறைவன் மனிதர்கள் யாராக இருந்தாலும் இறைவனுக்கு மட்டுமே தன்னை அர்ப்பணிப்பதன் மூலமும், நற்ச்செயல்கள் செய்வதன் மூலமும் மட்டுமே இறைவனிடம் கூலியைப் பெற முடியும் என்று கூறுகிறார்.

குருட்டு நம்பிக்கை, தொழுகை போன்ற வணக்க வழிபாட்டு முறைகள் பூஜை, புனஸ்காரங்கள் போன்றவற்றைக் கைக்கொள்வதால் மட்டும் சுவனம் நுழைந்து விட முடியாது என்பது இவ்வசனத்தில் தெளிவாகிறது. ஆகவே மனிதர்கள் அனைவரும் தங்களைப் படைத்த இறைவனை மட்டுமே வணங்கி, நல்வாழ்வு வாழ்ந்து, தங்கள் அனைவரையும் படைத்தது ஒரே இறைவன் தான் என்றுணர்ந்து, தாங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களே என்றறிந்து தர்மத்தின் படி வாழ்ந்து சர்வவல்லமை படைத்த இறைவனின் அளப்பெறும் கருணையைப் பெற முயற்ச்சிக்க வேண்டும். அதற்கு இறைவன் அருள் புரிவாராக!.

# இறைவனுக்கு கட்டுப்படுங்கள் துதருக்கு கட்டுப்படுங்கள்

தொடர் : 2

அபூபுஷ்ரா

குர்ஆன் வசனங்களுக்கு அவற்றில் இல்லாத அர்த்தங்களைக் கூறி அதன் கருத்தைச் சிதைப்பது, வசனங்களுக்குரிய முன்பின் தொடரிலிருந்து (Context) அவற்றைத் துண்டித்து, அதற்கு வியாக்கியானங்களையும், விளக்கங்களையும் தந்து வேறு பொருள் கூறுவது, சில வசனங்களை வேறு சில வசனங்கள் அல்லது ஹதீஸ்கள் மாற்றி விட்டதாக கூறுவது இவையல்லாம் ஹதீதுகளைப் பிரசாரம் செய்வோர் உபயோகிக்கும் சில தந்திரங்களாகும்.

இவற்றை வேண்டுமென்றே உள்ளே நுழைத்து விட்டு, பிறகு அதன் அடிப்படையிலேயே "குர்ஆன் புரிந்து கொள்ள முடியாதது, குழப்பமானது என்று பொதுமக்களைக் குழப்பி குர்ஆன் தெளிவானது விவரிக்கப்பட்டது" (6:114) என்ற இறைவன் வசனத்திற்கு மாறு செய்கிறார்கள், மக்களையும் வழி கெடுக்கிறார்கள் இவர்கள் தவறாக பயன்படுத்தும் வசனங்களின் ஒன்றான அல்லாஹ்விற்கு கட்டுப்படுங்கள் தூதருக்குக் கட்டுப்படுங்கள் என்ற வசனத்தை நாம் இங்கே ஆய்வு செய்கிறோம்.

தூதருக்கு கட்டுப்படுவது என்பது தூதர் பெயரால் கூறப்பட்ட செய்திகளுக்கு (ஹதீஸ்களுக்கு) கட்டுப்படுவதுதான் என்று கூறுவோர், யதார்த்தத்தில் புகாரிக்கும், திர்மிதி, இப்னுமாஜா, முஸ்லிம் போன்றோருக்கும்தான் கட்டுப்படுகிறார்கள். (புகாரியின் வாக்குமூலப்படி அவர் சேகரித்த ஹதீஸ்களில் 99% பொய்) ஹதீஸ்களுக்கு கட்டுப்படுதல் என்பது அதன் ஆசிரியர்களுக்கு, அல்லது அதைச் சரி என்று கூறுபவர்களுக்கு கட்டுபடுதலே அன்றி தூதருக்குக் கட்டுப்படுவது ஆகாது. தூதர் தந்த முழுமையான, தெளிவான விவரிக்கப்பட்ட குர் ஆனுக்குக் கட்டுப்படுவதுதான் தூதருக்கு கட்டுப்படுவது ஆகும். வசனம் 2 5 : 7 3 நம்பிக்கையாளர்கள் குர் ஆன் வசனங்களைக் கேட்டால் குருட்டுத்தனமாக, எதையும் பார்க்காமல் செவிட்டுத்தனமாக (எதையும் கேட்காமல், விளங்காமல்) நடக்க மாட்டார்கள் என்று கூறுகிறது. ஆனால் ஹதீஸ்களைப் பின்பற்றுவோர் இதைக் கண்டு கொள்வதே இல்லை. அவர்கள் 6:19, 7:3, 17:73, 50:43, 69:38-47, ஆகிய வசனங்கள் இறைவன் முஹம்மத் நபி மூலம் நமக்குத் தந்த ஒரே போதனை குர்ஆன் மட்டுமே என்று கூறுவதைப் பார்க்க மாட்டார்கள் வசனம் 25:30ல் முஹம்மது நபி மறுமையில் இறைவனிடம் "இறைவா என் சமூகத்தார் இக்குர் ஆனைப் புறக்கணித்து தூரத்தில் வைத்து விட்டனர்" என்று முறையீடு செய்வதை இவர்கள் கேட்க் மாட்டார்கள் முஹம்மத் நபி பின்பற்றியது குர்ஆனை மட்டும் என்பதை நினைத்துப் பார்க்க மாட்டார்கள். குர் ஆன் முழுமையானது, விவரிக்கப்பட்டது என்பதை விளங்கிக் கொள்ள மாட்டார்கள். (6:114)

அல்லாஹ் தன் அருள் மறையில் முஹம்மது நபிக்கு அருளப்பட்டது, நாம் பின்பற்ற வேண்டியது அல்குர் ஆன் மட்டுமே என்பதை ஆணித்தரமாக, இருகருத்துக்கு இடமில்லாமல் கூறுகிறார். அல்லாஹ் முஹம்மது நபிக்கு குர் ஆனைத் தந்ததாகக் கூறுகிறாரே அன்றி குர் ஆனையும் ஹதீஸ்களையும் அல்ல. யூதர்கள் தெளராத்தையும் தல்மூதையும் (யூதர்கள் பின்பற்றும் ஹதீஸ்கள்) பின்பற்றுவது போலவே இன்றைய முஸ்லிம்கள் ஹதீதுகளை பின்பற்றுகின்றனர்.

ஷைத்தானின் சூழ்ச்சி என்னவென்றால் நபியை நேசிப்பது என்ற பெயரில் அவரை அல்லாஹ்வுக்கு அடுத்தபடியாக ஆக்கி பின்னர் அவர்களை வரம்பு மீற வைத்து, மக்களை இணைவைப்பின் பக்கம் தள்ளிவிடுவதுதான். இதன் மூலம் மனிதர்களை அல்லாஹ்வுக்கும்,

தூதருக்கும் மாறு செய்ய வைப்பதில் அவன் வெற்றியடைந்து விடுகிறான். வரம்பு மீறிய எந்த ஒன்றும் அதற்கு நேர் மாறாக ஆகிவிடும். அன்பு வரம்பு மீறும்போது அது வெறுப்பாக மாறிவிடுகிறது. இதே சூழ்ச்சியைத் தான் அவன் கிறித்துவர்களிடமும் செய்தான். ஆனால் இயேசு தன்னை வணங்குபவர்களைக் கைவிட்டு விடுவார் என்று குர்ஆன் 5:116-117 லும், பைபிள் - மத்தேயு 7:21-23 லும் கூறுகின்றன. முஹம்மத் நபியும் குர் ஆனைப் புறக்கணித்தவர்களைக் கைவிட்டு விடுவார்கள் என்று 25 : 30 தெளிவாக்குகிறது.

நபியை நேசிப்பது என்ற பெயரில் அவர்களுக்கு மாறு செய்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு ஒரு நேரடி உதாரணம் 2 : 285 ஆம் வசனத்தை படிப்பதன் மூலம் அறியலாம். அவ் வசனத்தைப் பார்ப்பதற்கு முன் அதில் உள்ள வார்த்தைகள் நபியின் நாவிலிருந்து வந்தவை என்பதை நினைவிலிருத்திக் கொள்வோம்.

"தூதர் தம் இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதை நம்புகிறார். அவ்வாறே நம்பிக்கை கொண்டவர்களும். அனைவரும் இறைவனை, அவர் வானவர்களை, அவர் வேதங்களை அவர் தூதர்களை நம்புகிறார்கள். நாம் அவர் தூதர்களில் எவரையும் பிரித்து வேற்றுமை பாராட்ட மாட்டோம். மேலும் அவர்கள் கூறுவர், நாங்கள் கேட்டோம், கட்டுப்பட்டோம், எங்களை மன்னிப்பீராக எங்கள் இறைவா, உம்மிடமே நாங்கள் திரும்ப இண்டியிருக்கிறது." (2:285)

இன்றைய முஸ்லிம்கள் இவ்வாறு கூறுகிறார்களா? தூதர்களிட்ம் வேற்றுமை காட்டக்கூடாது என்ற இந்த இறைக்கட்டளைக்குக் கட்டுப்படுகிறார்களா? கேட்டோம், கட்டுப்பட்டோம் என்று கூறும்படி அல்லாஹ் கூறுகிறார். இவ்விஷயத்தில் தான் இன்றைய முஸ்லிம்கள் கேட்டோம், மாறு செய்தோம் என்று நடக்கிறார்கள். ஹதீதுகளின் அடிப்படையில் மற்ற அனைத்து நபிமார்களை விடவும் முஹம்மத் நபியை பல விதங்களில் உயர்த்தி வேற்றுமை பாராட்டுவது இஸ்லாமிய உலகம் நன்கறிந்த வாழ்க்கை உண்மை.

இவ்வசனத்தை படித்து, சிந்திக்கும் பாக்கியம் பெற்ற முஸ்லிம்கள், ஆதாரபூர்வமாக முஹம்மத் நபி நமக்குத் தன் நாவால் கூறிய குர் ஆனுக்கு மாறு செய்ய ஏவும் இத்தகைய பொய்ச் செய்திகளை விட்டு விட்டு குர் ஆனை மட்டும் பற்றிப்பிடிப்பர். துரதிருஷ்டசாலிகளே குருட்டுத்தனமாக தங்கள் முன்னோர்களும், ஆலிம்களும் தந்த செவி வழிச் செய்திகளைப் பின்பற்றுவர்.

இறைவன் இறக்கிய வேதத்தைப் பின்பற்றுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால் அவர்கள் இல்லை எங்கள் மூதாதையர்கள் எதைச் செய்ததாக நாங்கள் கண்டோமோ அதையே பின்பற்றுவோம் என்று கூறுகிறார்கள்" சாத்தான் அவர்களை கொழுந்து விட்டு எறியும் நெருப்பை நோக்கி அழைத்தாலுமா? (31:21)

யார் தூதருக்குக் கட்டுப்படுகிறாரோ அவர் இறைவனுக்குக் கட்டுப்படுகிறார், எவரேனும் திரும்பி விட்டால், (நபியே) நாம் உம்மை அவர்களுக்குப் பொறுப்பாளராக அனுப்பவில்லை. (4:80)

இன்னும் இறைவனுக்கு கட்டுப்படுங்கள் தூதருக்கும் கட்டுப்படுங்கள். இதில் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் புறக்கணித்து விட்டால் தூதைத் தெளிவாக எடுத்துரைப்பது மட்டுமே தூதர் மீது கடமை என்பதை அறிந்து கொள்ளுங்கள். (5:92)

| | | |
|---|---|---|
| ஒளிவருடம் | = | ஒளி 1 வருடகாலம் பயணம் செய்யும் துரம். |
| | = | 300000 X 60 X 60 X 24 X 3651/4 KM ஆகும். |
| மில்லியன் | = | 10 லட்சம்=1000000 |
| பில்லியன் | = | 1000 000 000 000 = மில்லியன் X மில்லியன் |
| டிரில்லியன் | = | 1000 000 000 000 000 000 000. |

# வாழ்வின் இரகசியங்கள்

தொடர் -1

C.S. ரஃபியுத்தீன்

சோதிக்கப்படுவதற்காகவே இவ்வுலகில் மனிதன் படைக்கப்பட்டு இருக்கிறான் என்று கூறுகிறது அல்குர்ஆன். நம்பிக்கை கொண்டோம் என்று கூறினால் மட்டும் போதும், விட்டு விடப்படுவோம் என்று நினைக்கிறார்களா? என்று அது நம்மை வினவுகிறது. நம்பிக்கை கொண்டோரையும் நயவஞ்சகரையும் அல்லாஹ் தனித்தனியாகப் பிரித்து விடுவார் என்றும் அது கூறுகிறது. (67:1-2, 29:1-3, 3:179)

வாழ்வு சோதனை (Test) என்றால் அந்தப்பரீட்சையில் நமக்குரிய பாடத்திட்டம் (Syllabus) என்ன? புகழ் அனைத்தும் இறைவனுக்கே! இறைவன் நமக்கு அல்குர் ஆனைத்தான் Syllabus ஆகத் தந்திருக்கிறார். ஹதீஸ்களும் மனிதனுக்கு Syllabus என்றால்? யாருக்கும் Syllabus என்னவென்றே சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் ஒரு Syllabus சொல்லுவார். நமக்கு Verification இருக்காது. நம்பிக்கை கொண்டவர்களை அந்தத்துர்பாக்கிய நிலையில் அல்லாஹ் ஆக்கவில்லை. அது அல்லாஹ்விடம் இருந்து வந்த Syllabus தான் என்பதற்கு ஆதாரங்கள் ஏராளம் (பரீட்சையில் Grade கொடுக்கப்ப போகிறவர் அல்லாஹ்தான் அவர் சொல்வது தானே Syllabus சரி ஹதீஸ்களும் Syllabus என்பவர்கள் அதில் நுழைந்து அதன் கும்மிருட்டில் காணாமற் போகட்டும். நாம் நம் Syllabusல் கவனத்தைச் செலுத்துவோமா?

வாழ்வெனும் பரீட்சைக்கு குர்ஆன் முழுமையான Syllabus ஆகும். அது வாழ்வின் அனைத்து விஷயங்களுக்கும் தீர்வைத்தருகிறது. அதனடிப்படையில் தன் வாழ்வை அமைத்துக் கொண்டோர் மட்டுமே இந்தப்பரீட்சையில் வெற்றி பெற முடியும்,

அது கூறும் பாடங்கள் பல, பற்பல. அவற்றில் ஒவ்வொன்றாகப் பார்த்து கற்றுக்கொள்வோமா? நாம் நமக்கு தேவையானவற்றிற்கு முன்னுரிமை கொடுப்போம். சரி, இப்போதைய நம் உடனடித்தேவைகளில் ஒன்று' காரியங்கள்' சீராவது! கிட்டத்தட்ட எல்லாருக்கும் இந்தப்பிரச்சனை உள்ளது. அங்க போவனும், அது வரனும், இது வேற காணோம். இத்தனை மணிக்குள்ள அங்க இல்லாட்டி பிரச்சனை இப்படி எல்லா காரியங்களும் டைட்டாக இருக்கிறது. ஒரு சீர் இல்லை, எப்படி சீர் செய்வது?

காரியங்கள் சீராவது பற்றி குர் ஆன் என்ன கூறுகிறது என்று தேடுவோமா? முதலில் நம் நினைவுக்கு வருவது 47வது சூராவான சூரா முஹம்மதின் முதல் மூன்று வசனங்கள். முதல் வசனம் யார் நிராகரித்து அல்லாஹ்வின் வழியிலிருந்து மக்களைத் தடுத்தார்களோ அவர்கள் காரியங்கள் வீண் என்றும் பலனளிக்காதது என்றும் (Nullified)-கூறுகிறது. நிராகரிப்பிலிருந்தும் அல்லாஹ்வின் வழியில் மக்களைத் தடுப்பதிலிருந்தும் இறைவன் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

இரண்டாவது வசனத்தில் நம் தலைப்பின் முக்கிய விஷயம் வருகிறது. அல்லாஹ் கூறுகிறார் யார் நம்பிக்கை கொண்டு, நற் செயல்கள் செய்து மேலும் முஹம்மதின் மேல் இறக்கப்பட்டதை சத்தியம் (அல்ஹக்கு) என்று நம்புகிறாரோ அவருடைய தீய செயல்களை, பாவகாரியங்களைப் போக்கி, காரியங்களை சீர்செய்வதாக வாக்களிக்கிறார். இங்கே நம் பிரச்சனைக்கு தீர்வு கூறப்படுகிறது. ஹதீஸ்களும் முஹம்மது நபிக்கு இறக்கப்பட்டது தான் என்று வம்புக்கு வருபவர்களை நீங்கள் போய் உங்கள் ஹதீஸ்களில் தேடிக் கொள்ளுங்கள் என்று அனுப்பி விட்டு நாம் நம் விஷயத்தில் மேலும் கவனத்தைத் திசை திருப்பாமல் மீண்டும் குர்ஆனுக்குள் போவோம்.

இங்கே முஹம்மது நபி மேல் இறக்கப்பட்ட குர்ஆனை' 'அல்ஹக்' (சத்தியம்) என்று நம்புவதை இறைவன் (Criteria) அளவுகோல் ஆகக் கொடுக்கிறார். So, இதுக்குள்ளதான் இதன்படி நடப்பதில்தான் நம் காரியங்கள் சீராவது இருக்கிறது. அஞ்சவேண்டாம்! குர்ஆன் படி நடப்பது ஒன்றும் அவ்வளவு கஷ்டமான காரியமில்லை. ஷைத்தானின் அச்சுறுத்தலுக்கு நம்பிக்கை கொண்டவர்கள் அஞ்சலாமா? ( அவசியம் பார்க்க அல்குர்ஆன் 2:185, 3:108, 5:6, 20:1-3, 87:6-8, 92:5-7) இவ்வசனங்கள் அனைத்தும் (இன்னும் பல உள்ளன) அல்லாஹ் நமக்கு எந்தக் கஷ்டத்தையும் கொடுக்கவில்லை என்றும், அதை அவர் விரும்பவில்லை என்றும், நாம் கஷ்டப்படுவதற்காக இந்தக் குர் ஆனை இறக்கி வைக்கவில்லை என்றும், இன்னும் இலகுவாக்குவார் என்றும் வாக்களிக்கின்றன. So, ஷைத்தானின் மிரட்டல்களுக்கு எல்லாம் நம்பிக்கை கொண்டவர்கள் அஞ்ச வேண்டியதில்லை. சரிதானே!

தொடர்ந்து மூன்றாவது வசனத்தில் அல்லாஹ் காரணத்தையும் கூறுகிறார். படித்து படிப்பினை பெறுவோம். அடுத்தபடியாக நம் தலைப்பின் மேட்டர் உள்ள இன்னும் ஒரு வசனம் 33:70,71 ஆகும். அந்த வசனம் "யா அய்யுஹல்லதீன ஆமனுத்தக்குல்லாஹ் நம்பிக்கை கொண்டோரே அல்லாஹ்வை அஞ்சுங்கள்" வ கூலு கவ்லன் ஸதீதா - மேலும் கூறுவதை நேரடியாக, சரியாக கூறுங்கள் "யுஸ்லிஹ் லகும் அஃமாலகும்" - அவர் உங்கள் காரியங்களைச் சீர் செய்வார் "வயக்ஃபிர்லகும் துணூபகும்"- மேலும் உங்கள் பாவங்களையும் மன்னிப்பார் என்று கூறுகிறது.

முதலில் அல்லாஹ்வை அஞ்சுமாறு கூறப்படுகிறது. இதுவே அனைத்துக் காரியங்களும் சீராவதற்கு முதல் தகுதியாக கூறப்படுகிறது. அல்லாஹ்வை அஞ்சுவது என்றால் எல்லாக்காரியங்களும் செய்ய முடியாதே, இஷ்டப்படி இருக்க முடியாதே என்பவர்களும், வாழ்வே மாறி விடுமே என்று அஞ்சுபவர்களும் போகட்டும். நம்பிக்கை கொண்ட நமக்கு அல்லாஹ்வை அஞ்சுவது என்பது இயல்பான ஒன்று இல்லையா? Sol நம்மிடம் Criteria No.1 ஓரளவுக்கு இருக்கிறது. (தக்வா என்பதுதான் அதில் உள்ள சொல்) அது கூடக்கூட காரியங்கள் சீராகும் வேகம் கூடும். சரிதானே!

இதில் இரண்டாவது Criteria "கூறுவதை நேரடியாக சரியாக கூறுவது" இதில் ஒரு ரகசியம் இருக்கிறது. இன்று நம் பெரும்பாலான காரியங்கள் கோளாறாக இருப்பதன் மூல காரணம் இதுவெனலாம். சுற்றி வளைத்துப் பேசுவது, பூடகமாகப் பேசுவது, பாசாங் செய்வது இவைதான் நம் பெரும்பான்மையான காரியங்கள் சீர்கெடக் காரணம் என்பதைச் சற்று சிந்திப்பவர்கள் உணர முடியும். சரியான வார்த்தைகளை உபயோகிக்கா விட்டாலும் தப்பர்த்தம் செய்யப்பட்டு பிரச்சனைகள் உருவாகலாம். நேரடியாக கூறுவது என்பது நாம் எல்லாவற்றையும் எல்லாரிடமும் சொல்ல வேண்டும் என்பதல்ல நமக்கு எந்த ரகசியங்களும் இருக்கக்கூடாது என்பதும் அல்ல. எதைக் கூற வேண்டியிருக்கிறதோ அதை நேரடியாகச் சரியான வார்த்தைகளைப் பயன்படுத்திக் கூறிவிடுவது என்பதே. இதை நாம் Practical ஆக வாழ்க்கையில் செய்ய ஆரம்பித்தோமென்றால் உடனடியாகப் பலன்களைக் காணமுடியும்.

மேலும் அல்லாஹ் 17:53 ல் "என் அடியார்களிடம் கூறும் அவர்கள் ஒருவர் மற்றவரிடம் இயன்றவரை சிறந்த முறையில் நடந்து கொள்ளட்டும். நிச்சயமாக ஷைத்தான் அவர்களிடையில் இடைவெளியை உண்டாக்குவான். நிச்சயமாக அவன் மனிதர்களுக்கு பகிரங்கமான பகைவனாவான் என்று கூறுகிறார்." ஆகவே நாம் அனைவரையும் இயன்ற வரையில் சிறந்த முறையில் நடத்த வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான Treatment கொடுக்கும் போது அவர்களில் சிலர் நம்மேல் விரோதத்தை மனதில் வளர்த்துக் கொள்ளக்கூடும். இவனால் நமக்கு என்ன கெடுதல் செய்ய முடியும்? இவனை எப்படி நடத்தினால் என்ன? என எண்ணுவது அறிவீனமாகும்.

யாருக்கு எங்கே, எப்பொழுது, என்ன சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்மால் சொல்ல முடியாது. தனக்கு விரோதமானவருக்குத் தீங்கிழைக்க, யாரும் அறியாத சந்தர்ப்பம் வரும்போது சராசரி மனிதர்கள் அதைப்பயன்படுத்திக் கொள்ளத் தவறமாட்டார்கள். Export Orderஐ கெடுத்த வாட்ச்மேன்கள் உண்டு, புறம் பேசத்தயங்காத அண்டைவீட்டார் உண்டு. கல்யாணத்தைக் கெடுத்த வேலைக்காரி உண்டு, குடும்பங்களில் பிளவு உண்டாக்கும் உறவினர்கள் உண்டு. எல்லாரும் சம்பந்தப் பட்டவர்களால் முறைகேடாக நடத்தப்பட்டவர்கள் ILL TREAT செய்யப்பட்டவர்கள்! தேவைதானா இது?

ஆகவே நாம் அனை வரையும், இயன்றவரை, மிகச் சிறந்த முறையில் நடத்தினால் நம் பல பிரச்சனைகள் குறையும். எல்லாரையும் சிறந்த முறையில் நடத்துவதால் எந்த நஷ்டமும் வந்து விடாது. யார் யாரை எந்த எந்த இடத்தில் வைக்க வேண்டுமோ அந்த இடத்தில்தான் வைக்க வேண்டும் என்பவர்கள். தாங்கள், அல்லாஹ்வால் எப்பொழுது எந்த இடத்தில் வைக்கப்படுவோம் என்பதை அறியமாட்டோம் என்பதை நினைவில் கொண்டு, அல்லாஹ்வை அஞ்சி அனைவரையும், இயன்றவரையில் மிகச்சிறந்த முறையில் நடத்தவேண்டும். இல்லையெனில் அவர்கள் காரியங்கள் சீர்கெட்டுப்போவதை எதிர்பார்க்கட்டும். நம்பிக்கை கொண்ட நாம் அல்லாஹ் கூறியபடி நடந்து, நம் காரியங்களை சீர்படுத்திக் கொள்வோம்.

(தொடரும்....)

# இறைவனின் முத்திரை - 19

இப்னு தாஜீத்தீன்

சென்ற இதழில் குர்ஆன் முழுமையையும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதமான கணிதக் கட்டமைப்பில் அமைக்கப்பட்டிருகிறது என்பது குறித்து சில விவரங்களைப் பார்த்தோம்.

அக்கட்டமைப்பு,பிரபஞ்சங்களின் அதிபதியிடமிருந்து, மனித குலத்திற்கு இறக்கப்பட்ட செய்திதான் அல்குர்ஆன் என்பதையும், அது முழுமையாக பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பதையும் நிரூப்பிதைக் கண்டோம். S.E.T.I. என்னும் அமெரிக்க அரசின் ஆராய்ச்சி அங்கம் (Search for Extra Terrestrial Intelligence) கோடிக்கணக்கான டாலர்கள் செலவு செய்து, பூமிக்கு வெளியில் ஏதேனும் அறிவுத்திறனோ, செய்திகளோ உள்ளதா என்பதைக் கண்டறிய முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆனால் விண்வெளியிலிருந்து இவ்வுலகிற்கு ஒரு செய்தி வந்தே இருக்கிறது, எனினும் மனிதர்கள் பெரும்பாலோர் அதை அறியாமலேயே இருக்கின்றார்கள். அல்குர் ஆன்

தான் மனிதகுலத்திற்கு கிடைத்த Extra Terrestrial Message அது எவ்வாறெல்லாம் மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்பதையும் நாம் தொடர்ந்து காண்போம்.

உலகில் வேறு எந்தப்புத்தகத்திலும் காணப்படாத ஒரு நவீன அமைப்பில் அல்குர் ஆனின் அத்தியாயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் 2 9 அத்தியாயங்கள் சில குறிப்பிட்ட எழுத்துக்களை முத்திரையாகக் கொண்டு துவங்குகின்றன. இம்முத்திரை எழுத்துக்களின் சிறப்பு என்ன என்பது பற்றியோ, அதற்கு என்ன விளக்கம் என்பது பத்தியோ1400 வருடங்களாக யாரும் அறிய முடியவில்லை. அது இறைவனால் பாதுகாக்கப்பட்ட ஒரு ரகசியமாக இருந்து வந்தது. அல்குர்ஆன் 10:20, 25:4-6 வசனங்கள் குர்ஆனின் அற்புதம் அது இறைவனிடமிருந்து வந்ததுதான் என்பதற்குரிய அத்தாட்சி ஒரு குறிப்பிட்ட காலம் வரை மறைந்து வைக்கப்பட்டிருக்கும், ரகசியமாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கிறது. அந்த ரகசியம் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

முதலில்; (காஃப்) என்ற அரபு எழுத்தை முத்திரையாகக் கொண்டு துவங்கும் சூராக்களைப் பார்ப்போம் . அத்தியாயம் 50,42, ஆகியவற்றில் காஃப் என்னும் எழுத்து முத்திரையாக உள்ளது. இவ்விரு சூராக்களிலும் தனித்தனியாக இடம் பெற்றுள்ள காஃப்களின் எண்ணிக்கை சரியாக 57=19x3.

50ம் அத்தியாயம், காஃப் மேலும் இந்த மகத்தான குர்ஆன் என்று துவங்குகிறது. இது காஃப் என்பது குர் ஆனைக் குறிக்கிறது என்பதைக் காட்டுகிறது. இரு காஃப் சூராக்களிலும் இடம் பெற்றுள்ள காஃப் எனும் எழுத்துக்களின் எண்ணிக்கை 114 இது குர்ஆனில் உள்ள சூராக்களின் எண்ணிக்கையாகும்.

$$57+57 = 114; 114 = 19x6$$

காஃப் என்ற எழுத்து இடம் பெறும் இரு சூராக்களில் சூரா 42 ல் உள்ள வசனங்களின் எண்ணிக்கை 53 சூரா 50ல் உள்ள வசனங்களின் எண்ணிக்கை 45

$$42 + 53 = 95 = 19 x 5 : 50 + 45 = 95 = 19 x 5$$

காஃப் குறித்த வேறு சில அற்புதங்களைப் பின்னர் காண்போம். இப்பொழுது இரு எழுத்துக்கள் கொண்ட யாஸீன் சூராவைப் பார்ப்போம். சூரா 36 யா, ஸீன் என்ற இரு எழுத்துக்களை முத்திரையாகக் கொண்டுள்ளது. அதில் யா என்ற எழுத்து 237 முறையும் ஸீன் என்ற எழுத்து 48 முறையும் இடம் பெற்றுள்ளன. இவ்விரு எழுத்துக்களின் கூட்டுத்தொகை 285=19x15 (குர்ஆனில் யா என்ற எழுத்து இரு விதங்களில் எழுதப்படுகிறது. ஒன்று வெளிப்படையாகவும் மற்றொன்று மறைமுகமாகவும் உச்சரிக்கப்படுகிறது ஆனால் சூரா 3 6 ல் மறைமுகமாக உச்சரிக்கப்படும் ஒரு யா கூட இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது மூன்று எழுத்துக்கள் கொண்ட அலிஃப் (அ) லாம் (ல) மீம் (ம) என்று துவங்கும் ஆறு சூராக்களைப் பார்ப்போம். இம்மூன்று எழுத்துக்களும் அரபிமொழியில் இதே வரிசையில் அதிகம் உபயோகிக்கப்படும் எழுத்துக்களாகும். இவ்வெழுத்துக்கள் 2,3,29,30,31,32 சூராக்களின் துவக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆறு சூராக்களிலும் இடம் பெற்றுள்ள இவ்வெழுத்துக்களின் கூட்டுத்தொகை மிகச்சரியாக 19' ஆல் வகுபடக்கூடியதாக உள்ளது. இதில் ஏதேனும் ஒரு எழுத்தை நீக்கினாலோ சேர்த்தாலோ இவ்வற்புத அமைப்பு குலைந்து போய்விடும். அவ்வத்தியங்களையும் அதில் உள்ள முத்திரை எழுத்துக்களின் எண்ணிக்கைகளை கீழ்காணும் அட்டவணையில் பார்த்துக் கொள்க.

| அத்தியாயம் | அலிப்(அ) | லாம்(ல) | மீம்(ம) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2 | 4502 | 3202 | 2195 | 9899(19 X 521) |
| 3 | 2521 | 1892 | 1249 | 5662(19 X 289) |
| 29 | 774 | 554 | 344 | 1672(19 X 88) |
| 30 | 544 | 393 | 317 | 1254(19 X 66) |
| 31 | 347 | 297 | 173 | 817(19 X 43) |
| 32 | 257 | 155 | 158 | 570(19 X 30) |

இதைப்போன்ற மற்றொரு வகை அலிஃப், லாம், ரா (அ,ல;ர) ஆகும். இவ்வெழுத்துகள் 10, 11, 12, 14, 15 ஆகிய சூராக்களின் துவக்கத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த சூராக்களில் இவ்வெழுத்துக்கள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதை கீழ்காணும் அட்டவணையில் காண்போம்.

| அத்தியாயம் | அலிப்(அ) | லாம்(ல) | ரா(ர) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 10 | 1319 | 913 | 257 | 2489(19 X 131) |
| 11 | 1370 | 794 | 325 | 2489(19 X 131) |
| 12 | 1306 | 812 | 257 | 2375(19 X 125) |
| 14 | 585 | 452 | 160 | 1197(19 X 63) |
| 15 | 493 | 323 | 96 | 912(19 X 48) |
| 32 | 257 | 155 | 158 | 570(19 X 30) |

இனி நான்கு எழுத்துக்களை முத்திரையாகக் கொண்டு துவங்கும், அலிஃப் (அ) லாம் (ல) மீம் (ம) ரா (ர) என்ற 13 வது சூராவில் உள்ள தகவல்களைப் பார்ப்போம். இதில் இடம்பெறும் (அ) அலிஃப் 605, (ல) லாம் 480, (ம) மீம் 260, (ரா) ரா 137. இந்த எழுத்துக்களின் கூட்டு விளைவிக்கும் அற்புதங்களைச் சற்று சிந்துத்துப் பாருங்களேன்!

605 + 480 +260 + 137 + = 1482 (19 x 78)

ஒரு எழுத்தை முத்திரையாகக் கொண்ட சூராவைக்கூட இத்தகைய ஒரு கணிதக் கட்டமைப்பில் அமைக்க முடியாது என்பதை நாம் உணரமுடிகிற போது எல்லாம் வல்ல இறைவன் இரண்டு, மூன்று, நான்கு, மட்டுமல்ல ஐந்து எழுத்துக்களையும் கொண்ட சூராவையும் அமைத்திருக்கிறார். அதன் விபரங்களை கண்டு பிரமிப்போம் வாருங்கள்! அதன் சூரா எண் 19!

19 வது சூராவில் மிக நீண்ட வகை முத்திரையாக காஃப் (க) ஹா (ஹ) யா (ய) ஐன் (அ) ஸாத் (ச) என்ற ஐந்து எழுத்துக்கள் இடம் பெறுகின்றன . இதில் காஃப் 137 முறையும் (சூரா 50 லும் 42 லும் இடம் பெறும் காஃப் (Q) வேறு இதில் இடம் பெறும் காஃப் வேறு (K) ) ஹா-75ம் யா -௩௪௩ம் ஐன்- ககளம், ஸாத்-26ம் இடம் பெறுகின்றன. இவற்றின் கூட்டுத்தொகையும் 19ஆல் சரியாக வகுப்படக் கூடிய எண்தான்

137 + 175 + 343 + 117 +2 6+ = 798 = 19 x 42

சற்று சிந்தித்துப் பாருங்கள் ஒரு புத்தகம் அதில் உள்ள அனைத்து விஷயங்களும் ஒரு கணிதக் கட்டமைப்பில் அமைய வேண்டும் அதன் நடையும் மிக உயர்ந்ததாக இருக்க வேண்டும். கருத்துக்களும் சரியானதாக இருக்க வேண்டும். இந்த அமைப்பில் தவறில்லாத ஒரு புத்தகத்தை ஒரு மனிதனால் செய்ய, முடியுமா? இன்றைய உலகின் நவீன வசதிகளான கம்ப்யூட்டர் போன்ற சாதனங்களின் துணையோடு அனைத்து அறிவாளிகளும் ஒன்று சேர்ந்தாலும் கூட செய்ய முடியாது என்பது சராசரி அறிவுள்ளவர்களுக்கும் புரிந்து விடும். ஏனெனில் நிச்சயமாக இப்படிச் செய்வது மனிதசக்திக்கு அப்பாற்பட்டது. ஒரு சிறு அத்தியாயம் கூட இத்தகைய அமைப்பில் அமைக்க மனித சக்தியால் முடியாது என்னும் போது, பற்பல விதங்களில் ஒரு முழு புத்தகத்தையும் இப்படி அமைக்க இறைவனைத் தவிர வேறு யாரால் முடியும்?

எண்ணும் எழுத்தும் அறிந்த சமுதாயத்திற்கு இதை விடப் பெரிய அற்புதம் ஏதேனும் உள்ளதா என்ன? இதை முஹம்மத் நபி சொந்தமாகச் சொன்னது என்று எவரேனும் இனி கூற முடியுமா? இது ஒரு மிகப்பெரிய, மறுக்க முடியாத அற்புதம் என்பதை இது வரை கூறப்பட்ட விஷயங்களை வைத்தே ஒருவர் விளங்கிக் கொள்ள முடியும். ஆயினும் விஷயங்கள் இத்துடன் முடிந்து விடுபவையாக இல்லை. அவற்றைத் தொடர்ந்து காண்போம்.

( தொடரும் ... )

# குர்ஆன் மட்டும் போதாதா?

குர்ஆன் மட்டும் போதுமா? என்று சிலர் கேட்பது அல்லாஹ் மட்டும் போதுமா?

குர்ஆன் மட்டுமே மார்க்கம் என்ற சத்தியத்தை நாம் மக்கள் முன் எடுத்து வைக்கும்போது மார்க்கத்தையே பிழைப்பாகக் கொண்ட ஆலிம்கள் என்று அறியப்படும் இஸ்லாமியப் புரோகிதர்கள் குர்ஆனைத் தெளிவில்லாதது போலவும், விவரிக்கப்படாதது போலவும், முழுமையில்லாதது போலவும் சித்தரிப்பதற்காக சில கேள்விகளையும், சந்தேகங்களையும் எழுப்புகின்றனர். இவர்களின் இத்தகைய கேள்விகள் குர்ஆனைப் பற்றிய இவர்களின் அறியாமையையே வெளிப்படுத்துகிறது.

குர்ஆனுக்கு முரணான எத்தனையோ ஹதீஸ்களைப் பற்றி நாங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு, உதாரணமாக கப்ர் வேதனை இல்லை, தொழுகையில் மௌனமாக ஓதும்படி இல்லை, விபச்சாரத்திற்கு கல்லாலடித்துக் கொல்லும் தண்டனை இல்லை, தஜ்ஜாலைப் பற்றிய குறிப்பே இல்லை ஈஸா நபியின் இரண்டாம் வருகை பற்றியும் கூட இல்லை. அலிஃப், லாம், மீம், மிற்கு விளக்கங்கள் ஏன் இல்லை. இது போன்ற இன்னும் பால கேள்விகளுக்கு எந்தப் பதிலும் கூறவில்லை. மாறாக எதிர்க்கேள்விகள் கேட்கிறார்கள். இதனால் குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியாதவாறு இறைவன் இவர்கள் இதயத்தில் முத்திரையிட்டு விடுகிறார்.

செப்டம்பர் 1999 மாத அல்முபீன் இதழ் முழுவதையும் குர்ஆன் மட்டும் போதுமா? என்ற தலைப்பிட்டு, குர் ஆன் மட்டும் போதாது என்று நிரூபிப்பதற்காக செலவு செய்திருக்கிறார்கள் இவர்களுடைய இன்னும் இதுபோன்ற கேள்விகளை எழுப்பும் மற்ற பிரிவினர்களுடைய கேள்விகளையும் அதற்கான விளக்கங்களையும் இங்கே நாம் ஆராய்வோம். முதலில் அல்முபீன் எழுப்பிய சந்தேகங்களையும் கேள்விகளையும் இங்கே பார்ப்போம்.

## அவர்களது கேள்விகளும் - நமது விளக்கங்களும்

“ நிச்சயமாக இறைவனிடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். வானங்களையும் பூமியையும் அவன் படைத்த நாள் முதலே இறைவனின் பதிவேட்டில் இவ்வாறே உள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. இது தான் நேரான மார்க்கமாகும்." - அல்குர்ஆன் 9:36

கேள்வி :-

அவர்களின் முதல் கேள்வி 9:36ல் கூறப்படும் பனிரெண்டு மாதங்கள் எவை? ஒரு மாதம் என்பதன் அளவுகோல் என்ன? அந்தப்பன்னிரண்டு மாதங்களில் நான்கு புனித மாதங்கள் எவை?

விளக்கம் :-

இவர்களின் இந்தக் கேள்விகள் முஹம்மது நபி வந்துதான் இவற்றை

நமக்கு அறிவித்துத் தந்தார், அவை குர்ஆனில் இல்லை, ஆனால் ஹதீஸ்களில் உள்ளது, எனவே இதைப் போன்ற செய்திகளில் (ஹதீஸ்களில்) உள்ளவையும் மார்க்க ஆதாரங்களே என்ற மாயையில் சிக்கிக் கிடப்பதையே வெளிப்படுத்துகின்றது. ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் மாறானதாகும்.

இப்றாஹீம் நபிதான் இன்றைய இஸ்லாம் மார்க்கத்தின் தந்தை (6:74, 9:114, 14:41, 19:42-48, 26:86, 37:102-108 ) என்று இறைவன் தன் திருமறையில் கூறுகிறார்.

இன்றைய இஸ்லாம், அதாவது தொழுகை, நோன்பு, ஜக்காத் ஹஜ் ஆகிய கடமைகளைக் கொண்ட இஸ்லாம், அவர் காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. முஹம்மது நபியின் காலத்திற்கு முன்னரே இஸ்லாம் மார்க்கத்தின் எல்லா வணக்க வழிபாட்டு முறைகளும் நிலைநாட்டப் பட்டு விட்டதை நாம் அறிய முடிகிறது. (8:35, 9:54, 16:123, 21:73, 22:27)

குர்ஆன் இஸ்லாம் மார்க்கத்தை மில்லத்தே இப்ராஹீம் -- இப்ராஹீமின் மார்க்கம் என்று அழைக்கிறது (2:130-135, 3:95, 4:125, 6:161, 12:37- 38, 16:123, 21:173. 22:78) மேலும் குர்ஆனின் வசனம் 16:123 முஹம்மது நபியை இப்ராஹீமின் மார்க்கத்தை பின்பற்றுமாறு கட்டளையிடுகிறது.

இதிலிருந்து இப்ராஹீமின் மார்க்கமும், அதன் வழிபாட்டு முறைகளும் நிலைநாட்டப்பட்டு இருந்ததை நாம் அறிகிறோம். இல்லாத ஒன்றையா இறைவன் முஹம்மத் நபியைப் பின்பற்றச் சொல்வார்? நிலைநாட்டப்பட்ட இம்மார்க்கத்தைப் பின்பற்றுமாறு கட்டளையிட்ட இறைவன், அவற்றில் காலத்தின் தேவைக்கேற்ப சில மாற்றங்களை இறுதி வேதத்தில் செய்கிறார். உதாரணமாக நோன்புக் கால இரவுகளில் மனைவியுடன் உடலுறவு கொள்ளலாம் என்று அனுமதிப்பது. சிதைக்கப்பட்ட விஷயங்களை உதாரணமாக ஒளுவை அதற்குரிய நான்கு விஷயங்களை வரையறுக்கிறார் . தொழுகையில் கடைப்பிடிக்க வேண்டிய குரல் தொனியைக் குறிப்பிடுகிறார் (அதற்கு இன்றைய பெரும்பான்மையான முஸ்லிம்கள் மாறு செய்கிறார்கள்.) ( 1 7 : 1 1 0 ) இவ்வாறு நிலைநாட்டப்பட்ட மார்க்கத்தின் மாதங்கள் பனிரெண்டும், அவற்றை அடையாளம் காட்டும் பெயர்களும் நிலைநாட்டப்பட்டே வந்துள்ளன. அது இன்று நாம் பின்பற்றி வரும் சந்திர ஆண்டே ஆகும்.

முஹம்மத் ரசூலுல்லாஹ், ஹதீஸ்களில் இதுதான் ரமலான், இதுதான் துல்ஹஜ் என்று காட்டியது போலவும் அதன் பின்னர் தான் மனிதர்கள் அதை அறிந்து கொண்டார்கள். என்பது போலவும் கூறும் இவர்களின் கூற்று. இவர்கள் அறியாமையின் விளைவே அன்றி வேறில்லை. இவர்கள் எடுத்துக் கூறும் வசனமே வானம் பூமியைப் படைத்த காலத்தில் இருந்தே மாதங்களின் எண்ணிக்கை 1 2 ஆகும் என்று கூறுவதிலிருந்து மாதங்கள் நிலை நாட்டப்பட்டு வந்துள்ளதை அறிந்து கொள்ளலாம். அவை முஹம்மத் நபி

காலத்திற்கு முன்பே இருந்து அவர்கள் காலத்திலும் பின்பற்றப்பட்டு, இன்றும் நாம் பின்பற்றி வரும் முஹர்ரம் முதல் துல்ஹஜ் வரையிலான சந்திர ஆண்டே ஆகும். அவற்றில் புனிதமானது துல்ஹஜ்ஜும் அதைத் (12, 1, 2, & 3) தொடர்ந்த மூன்று மாதங்களுமாகும். அவற்றை முன்பின்னாக மாற்றி ரஜப், துல்காயிதா (7, 11, 12, & 1) துல்ஹஜ், முஹர்ரம் என்று அரபுகள் அவர்களுடைய வசதிக்காக மாற்றிக்கூறுவதை, அல்லாஹ் 9 : 3 7 ல் கண்டிக்கிறார் . போர் நிறுத்தம் (Ceasefire) என்பது ஒரு மாதமும், பின் சில மாதங்கள் கழித்து அதைத் தொடர்ந்த மூன்று மாதங்கள் என்றுமா வரும்?

மாதம் என்பதன் அளவுகோல் என்ன? என்றொரு கேள்வியை வேறு கேட்டிருக்கிறார்கள். இதற்கும் இவர்கள் பின்பற்றும் ஹதீஸ்களே காரணம். பிறையைக் கண்ணால் பார்த்துதான் மாதத்தை முடிவு செய்ய வேண்டும் என்று ஹதீஸ்கள் கூறுவதால் உலகம் முழுவதும் ஒரே நாளில் ஆரம்பிக்கும் ரமலான் மாதம் முஸ்லிம்களுக்கு மட்டும் இரண்டு, ஏன் மூன்று நாட்கள் கூட தள்ளி வரும், வித்தியாசப்படும். இதற்குக் காரணம் அல்லாஹ் குர்ஆனில் வசனம் 2:189ல் பிறைகள் காலம் காட்டுபவையாக இருக்கின்றன, மேலும் ஹஜ்ஜின் காலத்தை அறிவிப்பவையாக இருக்கின்றன" என்று கூறுவதை அறியாமல் இருப்பதுதான் அல்லது வேண்டுமென்றே புறக்கணிப்பதுதான் மாதத்தின் அளவுகோல் சந்திரன் பூமியை ஒரு முழு சுற்று சுற்றி வருவதுதான் ஒரு சந்திர மாதம் என்பது இன்று உலகம் அறிந்த உண்மை. கண்ணால் பார்த்துத் தான் பிறையைக் கணக்கிட வேண்டும் என்ற கற்கால நடைமுறையிலேயே இவர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. சூரியத் தேதியைக் கணக்கிடுவது போலவே சந்திரக்கணக்கையும் விஞ்ஞான ரீதியாக நாம்முன் கூட்டியே அறிந்து கொள்ள முடியும். "சந்திரன் தன் வட்ட வரைக்குள் குறிப்பிட்ட காலம் வரை தவறாது சுற்றும்" என்றும் (36:40) அதைக் கொண்டே நாம் காலத்தைக் கணக்கிட வேண்டும் (2:189) என்றும் குர்ஆன் வழிகாட்டுகிறது. அதைப் புறக்கணிப்பதால்தான் இவர்களுக்கு ரமலான் குழப்பமும், இதுபோன்ற அறிவீனமான கேள்விகளும் எழும்புகிறது. இது குறித்து மேலும் சந்தேகங்கள் இருந்து அவற்றை வாசகர்கள் நமக்கு அனுப்பினால் அவை இறைவன் நமக்களித்த குர்ஆனின் உதவி கொண்டு தெளிவு படுத்தப்படும்.

இவர்களின் இரண்டாவது கேள்வி 32:23 வசனத்தை "நிச்சயமாக நாம் மூஸாவுக்கு வேதத்தைக் கொடுத்தோம் அவரைச் சந்தித்தது பற்றி நீர் சந்தேகம் கொள்ள வேண்டாம் மேலும் அதை இஸ்ராயீலின் சந்ததியருக்கு ஒரு வழிகாட்டியாக ஆக்கினோம்" என்று மொழி பெயர்த்துவிட்டு, மூஸாவை முஹம்மத் நபி சந்தித்தது எப்போது? என்று கேட்கிறார்கள்

குர்ஆனை விளங்கவும், மார்க்கத்தை தெளிவுபடுத்தவும் ஆலிம்கள் இருக்கிறார்கள், அவர்கள் தவறான வழியைக் காட்டவே மாட்டார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கும் மக்களை ஆலிம்கள் கவனக் குறைவாக குர்ஆன் வசனங்களை கையாண்டு அதற்கு உண்மைக்கு மாறாகவும் மனோ இச்சைப்படியும் அர்த்தங்களைத் திரித்துக் கூறி ஏமாற்றுகிறார்கள். மேற்படி

வசனமொழிபெயர்ப்பில் இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டி, பின் ஏன் அவ்வாறு இருக்கிறது என்ற கேள்வியும் எழுப்புகிறார்கள். இது மக்கள் தங்களைக் கண்மூடி பின்பற்ற வேண்டும் என்று நினைக்கும் ஆலிம்களின் அற்பத்தந்திரம் ஆகும்.

மேற்படி வசன மொழிபெயர்ப்பு எந்தத் தமிழ்க் குர்ஆனிலும் காணப்படவில்லை. மூஸாவை முஹம்மத் நபி எப்போது சந்தித்தார்? என்ற கேள்விக்கு இடமே இல்லை. குர் ஆனைப்பற்றிய இவர்களின் அறியாமையை இது வெளிப்படுத்துகிறது. இந்த விஷமத்தனமான கேள்வி தங்களுக்கு குர்ஆனைப் பற்றி எல்லாம் தெரியும் என்ற அகம்பாவத்தையும், காட்டுகிறது.

குர்ஆனை இறைவன் அற்புதமான கணித கட்டமைப்பில் அமைத்திருப்பதால் ஒரு விஷயத்தைக் கூறிக்கொண்டு வரும்போது, இடைமறித்து வேறு விஷயமும் கூறி, பின்னர் மீண்டும் விட்ட இடத்திலிருந்து தொடர்கிறார் என்பதைக் குர்ஆனை ஆழ்ந்து, சிந்தித்துப் படிப்பவர்கள் விளங்கிக் கொள்ள முடியும் (உதாரணம் 23:43, 5:3, 57:25) அவ்விதமான ஒரு வசனமே இது என்பதைப் புரிந்திருந்தும், மக்களைக் குழப்புவதற்காக இது போன்ற தந்திரங்களை செய்கின்றனர்.

அதன் சரியான மொழிபெயர்ப்பாவது, "மூஸாவுக்கு நாம் வேதத்தை கொடுத்திருக்கிறோம் அவரைச் சந்திப்பது பற்றி நீர் எந்தச் சந்தேகமும் கொள்ள வேண்டாம் - மேலும் நாம் அதை இஸ்ராயீலின் சந்ததியருக்கு ஒரு வழிகாட்டியாக ஆக்கினோம்." இவ்வசனத்திலும் அதே விதமாக மூஸாவுக்கு வேதத்தை தந்த செய்தியைக் கூறும் இறைவன் இடை மறித்து தன்னைச் (அல்லாஹ்வை) சந்திக்க இருப்பதைக் குறித்து எந்தச் சந்தேகமும் கொள்ள வேண்டாம். என்று அறிவுறுத்தி பின்னர் தொடர்ந்து மூஸாவின் வேதத்தை இஸ்ராயீலின் சந்ததியருக்கு வழிகாட்டியாய் ஆக்கியதைக் கூறுகிறார். இறை வசனங்களை பயபக்தியோடும், நேர்வழிகாட்டலைப் பெறவேண்டும் என்ற தூய எண்ணத்தோடும் அணுகவேண்டும் குருட்டுத்தனமாக, செவிட்டுத் தனமாக அணுகாமல், சிந்தித்து விளங்க வேண்டும் என்றும் எண்ணுவோருக்குத்தான் குர் ஆன் நேரான வழியைக் காட்டும். நல்லடியார்கள் பற்பல மொழிபெயர்ப்புகளையும் ஒத்துப்பார்த்து இவர்களின் இத்தகைய மோசடிகளை விளங்கிக் கொள்ளலாம். (6:110)

தாம் மதிக்கும் ஆலிம்கள் சொல்லுவதுதான் சரியாக இருக்கும் என்று அவர்கள் மீது அதீத நம்பிக்கை வைக்காமல் அல்லாஹ்வை மட்டும் நம்பி வேதத்தின் மீது முழு நம்பிக்கை கொண்டு சத்தியத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அடுத்த கேள்விக்கான வசனம்:

"ஹஜ்ஜைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பீராக! அவர்கள் நடந்தும் வெகு தொலைவிலிருந்தும் வரும் மெலிந்த ஒட்டகங்களின் மீதும் உம்மிடம் வருவார்கள்." அல்குர்ஆன் 22:27

கேள்வி :-

அல்லாஹ் நபி (ஸல்) அவர்களை நோக்கி' உம்மிடம் மக்கள் வருவார்கள் என்று கூறுவது ஏன்? இப்போது ஹஜ் செய்ய வேண்டுமென்றால் நபி (ஸல்) அவர்களிடம் செல்லமுடியுமா?

விளக்கம் :-

அல்முபினைப் படிப்பவர்கள் குர்ஆன் மொழி பெயர்ப்பைப் புரட்டிக் கூடப்பார்க்க மாட்டார்கள் என்பது இவர்கள் நம்பிக்கை போலும் இல்லையென்றால் இப்ராஹீம் நபி சம்பந்தப்பட்ட வசனத்தை முஹம்மத் நபி சம்பந்தப்பட்டது என்று கூறுவார்களா? மேற்படி வசனம் இப்ராஹீம் நபிதான் முதன் முதலில் ஹஜ்ஜுக்கு அழைத்தார்கள் என்பதையும் அன்றிலிருந்தே மனிதர்கள் ஹஜ்ஜுக்கு வர ஆரம்பித்தனர் என்றும் கூறுகிறது. ஹஜ்ஜீக்கு நீர் அழையும், மக்கள் உம்மிடம் வாகனங்களில் ஹஜ் செய்ய வருவார்கள் என்று கூறுவதன் அர்த்தம், இபுறாஹீம் நபி (முஹம்மத் நபி என்று இவர்கள் புரட்டுகிறார்கள்) எப்பொழுதும் யிருடன் இருப்பார்கள் என்பது அல்ல. இவ்விதமாகத்தான் இவர்கள் குர்ஆன் வசனங்களை குருட்டுத்தனமாகவும், செவிட்டுத்தனமாகவும் அணுகுகிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. இவர்களின் மற்ற கேள்விகளிலும் உள்ள அறிவீனத்தையும், மக்களை ஏமாற்றும் தந்திரங்களையும் இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் வெளிப்படுத்துவோம்.

# SATAN
# THE MASTER HYPNOTIST

**Dr. A.Rashid Hamed**
Associate Professor of Psychology
New York State University
Oneonta, New York

Why does man deny God's profound signs within himself and throughout creation? Why did early peoples deny the miracles God sent to them? Why do most Muslims prefer innovations, conjecture, opinion, and tradition over the sure guidance of Qur'an? Why have Muslim religious leaders attempted to ignore and belittle the irrefutable miraculous code discovered in Qur'an? Why have Muslim religious leaders made such absurd claims as "the Qur'an does not contain 114 chapters," and "the Basmala does not consist of 19 letters?"

The answer is: **The Majority of Humanity has Given itself over to Satan, The Master Hypnotist**

In Keeping with his plan to crush all doubt in the hearts of sincere believers, God has made this answer even more overwhelmingly clear. God granted Satan power to hypnotize the descendants of Adam who choose Satan's point of view, namely, that "God alone is not enough.

" This Power is given to Satan under one crucial Condition: Anyone Shall Snap Out of the Hypnotic Trance upon Deciding to Worship God Alone. Such freedom of decision shall be preserved under all circumstances.

The Master Hypnotist's effectiveness lies in the fact that the majoirity of humans have chosen to remain under his domination and control.

Satan said, "My Lord, since it is your will that I go astray, I will surely entice them-on earth and will surely mislead them all: only your servants who are completely Devoted to you (shall escape my spell) God said, "This is my irrevocable law: you will have no power over my servants; Only the Stayers Shall Fall under your Spell." (15:39-42)

Satan advises his "Muslim" allies not to accept Qur'an alone. He tells them to limit the extent that they will believe everything in Qur'an. Satan instructs the humans to resist signs of God.

As soon as the human chooses not to uphold the word of God Alone and worship God Alone, the master Hypnotist robs and strips the human of his mind. Satan even makes his followers believe that they are guided.

God guides some people while others are committed to straying. They have chosen the devils as masters, of God, yet they believe that, they are guided. (7:30)

**HOW SATAN HYPNOTIZES HUMANTITY**

Hypnosis is a trancelike condition characterized by an altered state of consciousness, diminished will power, and an increased responsiveness to suggestions. People differ in their suggestibility to hypnosis. A person cannot be hypnotized against his will; he must obey the suggestions of a hypnotist. Hypnosis has been employed to help people with physical and psychological diseases, as well as for harmful purposes. The effective hypnotist is skilled in gaining the confidence of his clients. He knows that 'it takes two', the client and himself, to produce the desired effects. Our concern here is with the Master Hypnotist who misleads humanity en masse. The master Hypnotist also gains the trust of his subjects but, unlike human hypnotists, he is invisible!

Satan and his tribe can see you while you Do not see Them. We have assigned the devils as companions to those who refuse to believe. (7:27)

Satan meets the qualifications of a hypnotist because he knows en and how to make his suggestions, according to a person's mind, character, desires, and habits. He has considerable knowledge of human nature. and he has thoroughly succeeded in rendering millions of humans unable to use their minds.

(Satan Said,) "I will come to them from their front, and from behind them, and from their right, and from their left. Consequently, you will find most of them unappreciative." (7:17)

People who are unappreciative of God are hypnotized by Satan without their knowledge. Countless millions of people say, "I believe in God," when in fact their hearts do not mean it.

Their utterance is not more than lip service to go along with parents, friends, or the society at large. Whenever they have opportunities to break away from deception and doubt, they cling to fabricated falsehoods. This leaves them susceptible to Satan's hypnosis. For the Mater Hypnotist is given access to the person's true intentions and innermost beliefs, not outward appearances and lip- service utterances. By going against their God-given. Instinct to worship God Alone and uphold his word Alone (please see Qur'an 7:172), People enable the Master Hypnotist to set them up for self destructions behind an Invisible Barrier.

Some followers of previous scriptures may wish to mislead you, but they only mislead themselves Without Perceiving. (3:69)

They (Idol-worshipers) divert others from Qur'an, as they themselves stay away from it. Thus, they only destroy themselves Without Perceiving. (6:26)

As for those who reject our revelations, we will lead them on Without Them Ever Perceiving. I will even encourage them; indeed, My scheming is formidable. (7:182-183)

Satan gradually instils his suggestions into the minds of his subjects; ideas counter to the worship of God Alone. Satan hypnotizes his subjects into doing anything that reflects disbelief, IDOL - worship, or hypocrisy.

The devil says to the humans, "Disbelieve," then, when they do disbelieve, he says, "I disown you. I fear God, Lord of the universe." (59:16)

A trained hypnotist slowly infuses his directives into the subjects mind because this 'drop by drop' approach helps the subjects understand instructions, but, in Satan's case, it is a matter of making a person fell at home with negative promptings. God protects his sincere servants from the Master Hypnotist's obvious and subtle attempts to hypnotize them.

You shall say, "I seek refuge in you, My Lord, from the devils' suggestions. I seek refuge in you, My Lord, lest they approach me." (23:97 98)

# GREATNESS OF GOD

We learn from Verse 39:67 that God's greatness is far beyond human comprehension - the verse states that all seven universes are "folded within God's hand."

Supported by the Quran's formidable mathematical code, we are taught that our universe is the smallest and innermost of seven universes (41:12, 55:33, 67:5, & 72:8-12). Meanwhile, our Scientific advances have shown us that our galaxy, the Milky way is 100, 000 light years across, and that our universe contains a billion such galaxies and a billion trillion stars, plus countless decillioun of heavenly bodies. Our universe is estimated to span distances in excess of 20, 000, 000,000 light years.

# COUNT THE STARS!

If we taker only a quintillion (1,000,000,000,000,000,000) of the stars and simply count them (from 0 to quintillion) one count per second, day and night, this will take 32 billion years (more than the age of the universe). That is how long it will take to just "Count" them; but God "created" them. Such is the greatness of God.

We can appreciate the vastness of our universe if we imagine. Going on a space odyssey. When we leave the planet Earth towards the sun, at the speed of light, we reach the sun after 93,000,000 miles and 8 minutes. It will take us more than 50,000 years at the speed of light to exit our galaxy. From the outer limit of the MILKY WAY, our planet Earth is invisible. Not even the most powerful telescope can detect our tiny "Earth."

We have to spend more than 2,000,000 years at the speed of light to reach our next-door galaxy. At least 10,000,000,000 years, at the speed of light, must be spent to reach the outer limit of our universe. From the outer limit of our universe, even the Milky Way is like a Speck of dust in a large room.

The Second universe surrounds our universe. The third universe is larger than the second, and so on. More accurately, our universe should be considered the seventh universe, surrounded by the sixth universe, which is surrounded by the fifth universe, and so on. Can you imagine the vastness of the first, outermost universe? No number exists to describe the circumference of the first universe. This incomprehensible vastness is "within the first of God's hand." From the outer limit of the outermost universe, where is the planet Earth? How significant is it? On the infinitesimal mote called Earth, such minuscule creatures as Mary, Jesus, and Muhammad lived. Yet, some people set up these powerless humans as gods!

God's greatness is represented not only by the fact that He holds the seven universes in His hand, but also by the fact that He fully controls every atom, even subatomic components, everywhere in the greater universe (6:59, 10:61, & 34:3).

(Reproduced from the Appendices of the Translation of
Qur-an by Dr. Rashad.Khalifa. Phd.)

# பூமி தட்டையானது !!

N.A. அஹமது ஹுசேன்

பூமி தன்னுடைய அச்சில் சுழன்று கொண்டிருக்கும் ஒரு உருண்டை (முட்டைவடிவம்) என்பது அனைவருக்கும் தெரிந்த ஓர் உண்மை. இவ்வுண்மையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக கலிலியோ, (Galileo) கோப்பர் நிக்கஸ் (Coper Nicus ) போன்றவர்கள் சொன்னபோது, தங்களின் மத நம்பிக்கைகளுக்கு விரோதமானதாக இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக அன்றைய போப்பாண்டவரால் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இருந்தும் அதே மத நம்பிக்கையாளர்கள் 1969 ஆம் ஆண்டு அமெரிக்காவின் விண்வெளிக் கப்பல் சந்திரனில் இறங்கி அங்கிருந்து பூமியை புகைப்படம் எடுத்து காட்டிவிட்டபோது பழைய அச்செயலுக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டனர்.

ஆனால் இன்றுவரை ஹதீஸ்களின் அடிப்படையை நம்பிக் கொண்டிருப்பவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை என்னவெனில் "பூமி தட்டையாக உள்ளது" என்பதுதான். சமீபத்தில் மரணமடைந்த ஷேக் அப்துல் அஜிஜ் பென்பாஸ் (மதீனா இஸ்லாமிய பல்கலைகழகத்தின் தலைமை மதகுரு) 1975 ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பு அளித்தார் அது வருமாறு; இவர்கள் கூறுவது போல் உலகம் உருண்டு கொண்டிருப்பின், நாடுகள், மலைகள், மரங்கள், ஆறுகள், கடல்கள் ஆகியவற்றுக்கு அடித்தளம் இருக்காது மேலும் கிழக்கிலுள்ள நாடுகள் மேற்கிற்கும், மேற்கிலுள்ள நாடுகள் கிழக்கிற்கும் நகருவதை மக்கள் பார்ப்பார்கள். ஆகவே பூமி தட்டையாக உள்ளது. அது ஒரே இடத்தில் தின்று கொண்டிருக்கிறது. இத்தீர்ப்பை அவர் பாரம்பரிய முஸ்லிம்களால் மதிக்கப்படும் இப்னுகஸிரின் கீழ்கண்ட ஒரு தவறான விரிவுரையை வைத்து முடிவு செய்கிறார். ஆம், அவ்விரிவுரை பின்வருமாறு; 40,000 கொம்புகளை கொண்ட ஒரு எருது தன் கொம்புகளில் பூமியை சுமந்து கொண்டு ஒரு மிகப்பெரும் திமிங்கலத்தின் மீது நின்று கொண்டிருக்கிறது. இவ்வளவு முட்டாள் தனமான ஒரு விரிவுரையை அவர் எழுத தூண்டியது எது அவரின் மனோ இச்சைதான், மற்றும் ஹதீஸ்களிலிருந்து பெறப்படும் யூகங்கள்தான்.

இதில் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் என்னவென்றால் வானம்பூமியின் இரகசியங்களை அறிந்தவரான (25:4-6) அனைத்து படைப்பினங்களின் இரட்சகரான (1:2) இறைவன் தம் திருமறையில் 1400 ஆண்டுகளுக்கு முன்பே பூமியை நாம் முட்டை வடிவத்தில் படைத்துள்ளோம். (79:30) என்ற குர்ஆனுடைய வசனம். "இவர்கள் குர்ஆனில் பாண்டித்யம், அரபிபுலமை பெற்றிருந்தவர்களாக," இருந்தும் அதன் மீது கவனம் செலுத்தாமல் இருக்க வைத்தது எது? ஷைத்தானால் இறைவனின் அருள்மறை மீதுள்ள கவனத்தை திசை திருப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஹதீஸ்களின் மீதுள்ள பற்றுதலே காரணம்.

குர்ஆனை மட்டுமே தன்னுடைய வாழ்க்கையாக கொண்ட நபி அவர்கள் மீது, குர்ஆனுக்கு முற்றிலும் முரணாக பொய்யாக இட்டுக் கட்டப்பட்ட செய்திகளே ஹதீஸ்கள் ஆகும்.

குர்ஆன் தரும் காலத்தை விஞ்சிய உண்மைகள் நவீன முன்னேற்றமடைந்த விஞ்ஞானக் கருத்துக்களை அவை விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்படுவதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே எடுத்துச் சொல்லிவிட்டது. இங்கு சில உதாரணங்கள்:-

1. பூமி முட்டை வடிவத்தில் உள்ளது. (39:5, 79:30)

2. நிலையாக நிற்கவில்லை, அது தொடர்ந்து நகர்ந்து கொண்டே இருக்கிறது. (27:88)

3. சூரியன் ஒளியின் ஆதாரமாக இருக்கிறது அந்த ஒளியை சந்திரன் பிரதிபலிக்கிறது. (10:5, 25:61, 71:16)

4. வானத்தை நோக்கி பயணிக்கும் போது உச்சிக்கு செல்லச் செல்ல காற்றில் "ஆக்ஸிஜன்" அளவு குறைகிறது. (6:125)

5. வெடித்துச் சிதறும் பிக்பாங்' (Big Bang Theory) தத்துவம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (21:30)

6. விரிவடைந்து வரும் பிரபஞ்சம் (Expansion of Universes) என்பது விவரிக்கப்பட்டுள்ளது. (51:47) *

7. பிரபஞ்சத்தின் ஆரம்பம் புகைமண்டலம் (41:11)

8. Evolution பரிணாம கோட்பாடு -இறைவனால் வழிநடத்தப்படுகிற பரிணாம வளர்ச்சி ஒவ்வொரு உயிரின வகைக்குள்ளும் Species நடைபெற்று கொண்டே இருக்கிறது. 21:30, 24:45, 32:7-9, 18:37, 15:28-29, 7:11, 71:13-14

9. ஆணின் விந்தணுவே, குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதை தீர்மானிக்கிறது. 53:45-46

இறைவனின் மகத்துவம் (GREATNESS OF GOD) மேற்படி கட்டுரைக்கான விளக்க படங்கள் பிரபஞ்சங்கள் (UNIVERSE) காலக்ஸி (GALAXY) முன் அட்டையிலும் பின் அட்டையிலும் கொடுக்கப்பட்டுள்ளது.

# குர்ஆன் கூறும் மெய்ப்பிக்கும் தூதர்

புராதான காலத்திலிருந்து இறைவனிடம் இருந்து தூதர்கள் வரும் போதெல்லாம், அத்தூதர்களின் காலத்தில் வாழ்ந்தவர்கள் அவருக்கு முன்னர் வந்தவரையே மிகவும் உவந்து அவரே கடைசித்தூதர் என்றும் கூறி பின்னர் வருபவரை நிராகரிப்பது மனித இனத்துக்கே உரிய பொதுவான குனம்.

உதாரணமாக இறைவனின் (40:34) கூற்றுப் படி, யூகப் நபி இறுதித் தூதர் என்று மக்களால் கூறப்பட்டார். இதற்கு முன்னர், யூசுப் உங்களிடம் தெளிவான ஆதாரங்களுடன் வந்திருந்தார், ஆனால் நீங்கள் அவருடைய செய்தியைப் பற்றி சந்தேகித்தவாறு இருந்தீர்கள் பின்னர், அவர் இறந்த உடன் "இவருக்குப் பிறகு எந்தத் தூதரையும் இறைவன் அனுப்பவே மாட்டார் (அவரே இறுதி தூதர்) என்று கூறினீர்கள். இவ்வாறு வரம்பு மீறி, சந்தேகிப்போரை இறைவன் வழிதவறும் படி விட்டு விடுகிறார்."

குர் ஆன் வசனம் 3:81, இறைவன் எல்லா நபிமார்களுக்கும் வேதம் அருளிய பின்னர் அவற்றை மெய்ப்பிக்கும் தூதரை அனுப்புவார் என்கிறது. நபிமார்களிடம் இறைவன் ஓர் உடன்படிக்கை எடுத்தார் நான் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கொடுத்த பின்னர், உங்களிடமிருப்பதை மெய்பிக்கும் ஒரு தூதர் வருவார். அவரை நீங்கள் நம்பி, அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறினார். நீங்கள் இதனை ஏற்கிறீர்களா? இவ்வுடன் படிக்கையின் படி நடப்போம் என்று உறுதி கூறுகிறீர்களா? என்று கேட்டார். நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறினார்கள். நீங்கள் சாட்சியளித்திருக்கிறீர்கள் நானும் உங்களுடன் சாட்சியாய்
இருக்கிறேன்.

இவ்வசனம் வேதம் கொடுக்கப்பட்ட அனைத்து நபி மார்களுக்கும் பின்னர் ஒரு தூதர் வருவார் என்று குறிப்பிடுகிறது. இவ்வுடன் படிக்கை, முஹம்மத் நபியையும் உட்படுத்தியதாய் இருக்கிறது மேலும் இவ்வசனம், நபி என்பது வேறு, தூதர் என்பது வேறு என்று காட்டுவதாய் இருக்கிறது. ஆனால் முஹம்மது நபியை அதிகம் உவப்பவர்கள் அவரே மெய்ப்பிக்கும் தூதர் என்கின்றனர். இதனை முன்பே இறைவன் அறிந்தே, 33:7 ல் கூறுகிறார்.

“நபிமார்களிடம் குறிப்பாக உம்மிடம், நூஹ், இபுறாஹீம், மூஸா, மர்யமின் மகன் ஈஸா விடம் வாக்குறுதி வாங்கிய சமயத்தில் மிக்க உறுதியான வாக்குறுதியையே நாம்! எடுத்துக் கொண்டிருக்கிறோம்."

## நபி யார், தூதர் யார்?

வசனம் 3:81 நபிக்கும், தூதருக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுகிறது. நபிமார்களுக்கு வேதம் கொடுக்கப்படும் என்றும் முஹம்மத் இறுதி நபி (33:40) என்றும் குர்ஆன் கூறுவதால் வரக்கூடிய தூதர் நபியாக வர மாட்டார். அவர் எந்த ஒரு புதிய வேதத்தையும் கொண்டு வரமாட்டார்.

மேலும், குர்ஆனின் கூற்றுப்படி ஒவ்வொரு நபியும் தூதராக இருக்கிறார். ஆனால் ஒவ்வொரு தூதரும் நபியாக இருப்பதில்லை. "ரஸீல்" என்ற அரபி வார்த்தை பொதுவாக நபியையும் குறிப்பிட்டாலும் மற்றவர்களுக்கும் கூறப்படும் உதாரணமாக, இவ்வார்த்தை குர்ஆனில் எகிப்திய மன்னனின் தூதரைக் குறிக்கும் வார்த்தையாக 12:50 ல் குறிப்பிடப்படுகிறது. ஆனால் நபி என்ற அரபி வார்த்தை அல்லாஹ்வுடைய தூதர்களை மட்டுமே குறிக்கும் இவ்விரு வார்த்தைகளின் வேறுபாட்டை குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.

எல்லா நபிக்கும் வேதம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஹாரூன் நபிக்கு (19:53) வேதம் கொடுக்கப்பட்டதாக இல்லையே ஆகவே நபியும், ரசூலும் ஒன்றுதான் என்று கூற முயற்ச்சிக்கின்றனர். ஆனால் குர்ஆன் 21:48, 37:117 ல் மூஸாவுக்கும், ஹாரூனுக்கும் வேதங்கொடுக்கப்பட்டதைத் தெளிவாகக் கூறுகிறது. மேலும் 33:40 முஹம்மது இறுதி நபியே அன்றி இறுதித் தூதர் அல்ல என்று கூறுகிறது.

"முஹம்மது உங்களில் எந்த ஆணுக்கும் தந்தையாக இருக்கவில்லை. 33:40 அவர் இறைவனின் தூதராகவும் நபிமார்களில் இறுதியாகவும் இருக்கிறார்."

## மஹ்தி வருகை: ஷைத்தானின் கைவரிசையே

குர்ஆனின் 3:81 முன்னறிவிப்பின் படி, முஹம்மது நபி அவர்களுக்குப் பின் தூதர்வருகை இருப்பதை எவ்வகையிலும் மறுக்க இயலாது. 3:81, 33:40 மற்றும் 33:7 ன் படி இறைவனின் மெய்ப்பிக்கும் தூதர் முஹம்மத் நபி இல்லை என்பதை அறிகிறோம். வரலாறு (ஹதீஸ்) களில் இத்தூதர் குறித்த விஷயத்தில் ஏதாவது காணப்படுகிறதா என்று ஆராயவோமானால் இந்த முக்கியமான முன்னறிவிப்பு எவ்வாறு மறைக்கப்பட்டது என்பதை அறியலாம். அதுமட்டுமின்றி குர்ஆனின் முன்னறிவிப்பை நீக்குவது ஷைத்தானால் இயலாது என்பதால் மக்களைத் திசைதிருப்ப அவன் செய்த சூழ்ச்சியே ஹதீஸ்கள் ஆகும். ஷைத்தான் இம் முன்னறிவிப்பு வசனத்தை உபயோகித்து, ஹதீஸில் பல கற்பனைப் பாத்திரங்களை உலவ விட்டு அவ்வசனத்தில் உள்ளவர் போன்று காட்டவே மஹ்தி, இமாம்ஜமான், ஈஸாவின் மறுவருகை போன்றவைகளை உருவாக்கியுள்ளான். மேலும் நபி மற்றும் தூதர் இரண்டுமே ஒன்றுதான் என்ற தோற்றத்தையும் மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளான். இவ்வாறே நபியின் மறைவுக்குப் பின்னர், மக்கள் ஷைத்தானால் உருவாக்கப்பட்ட போலிகளின் வருகையை எதிர்பார்க்கலாயினர். இவ்வாறு எண்ணற்ற முஸ்லீம்களை அவனுடைய

கற்பனைப் பாத்திரங்களை எதிர்பார்க்குமாறு ஏமாற்றிக் கொண்டிருக்கின்றான். அவன் ஆளுமைக்கு உட்பட்டு விட்டவர்களை ஆரம்பத்தில் குர்ஆனில் இருப்பது போன்ற தோற்றத்தில் "மஹ்தி ரஸீல் வருவார்" என்று உருவாக்கினான். நாளடைவில், ரஸீல் நீங்கி மஹ்தி வருவார் என்றாகிவிட்டது.

மேலும் சூரா 72:25 முதல் 27 வரை உள்ள வசனங்களில் முஹம்மது நபி தன் நாவால் தனக்குப்பின்னர் ஒரு தூதர் வர இருக்கிறார் என்பதைக் கூறுகிறார். இதைக் குர் ஆனைப் படிப்பவர்கள் அறிந்து கொள்ளலாம்.

## போலி தூதர் யார்? மெய்ப்பிக்கும் தூதர் யார்?

போலி தூதர்களிலிருந்து இறைவனால் அனுப்பபட்ட, உண்மையான தூதர் யார் என்பதை அடையாளம் காண குர்ஆன் நேரிடையான திட்ட அளவுகளை அளிக்கிறது.
அவை வருமாறு:-

- இறைவனுடைய தூதர் இறைவனை மட்டுமே வணங்குமாறும் மேலும் எல்லாவகையான இணைவைப்புகளையும் விட்டுவிலகுமாறும் ஏவுவார். (21:25, 7:59, 65,73-85)

- இறைவனின் தூதர் அவருடைய தூதுத் துவத்திற்கு சான்றாலக தூய்மையான மறுக்கமுடியாத ஆதாரங்களை சமர்ப்பிப்பார். (9:70, 10:74, 20:56, 23:45)

- இறைவனின் தூதர் தனக்கென கூலி எதுவும் பெற்றுக் கொள்ள மாட்டார். (6:90, 10:72, 11:29-51, 23:72, 25:57, 36:21, 26:109)

எனவே, யாராவது தன்னைத் தூதர் என்று அறிவிப்பாரானால், மேற்கூறப்பட்ட மூன்று தகுதிகளைக் கொண்டவராக இல்லாவிடில் அவர் போலியானவர் என்பதை கணித்து விடலாம்.

மேலும் இறைவனின் உண்மையான தூதர் இறைவனுடைய மறைமுகமான படையினரால் உதவியளிக்கப்படுவார். (3:124-126; 9:26-40; 33:9, 37:171-173 48:4-7, 74:31) மேலும் அவருடைய கஸானாவிலிருந்து உதவியளிக்கப்படுகிறார் (63:78) இறைவனின் தூதருக்கும் அவரை விசுவாசிப்பவர்களுக்கும் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியும், கண்ணியமும் உறுதியளிக்கப்படுகிறது. (40:51, 58:21)

# இறைவன் கொடுத்த பெண்ணுரிமையை மறுக்கும் மனிதர்கள்

K.H. ஜீனத் மஹ்ஜபீன்

சர்வ வல்லமையுள்ள இறைவன் தனது இறுதி வேதமான திருக்குர் ஆனில் ஆண் - பெண் இருவருக்கும் சம உரிமைகளை வகுத்துத் தருகின்றார். அவை என்னென்ன என்பதையும் அவற்றை எவ்வாறு நாம் அறிந்து நடைமுறைப்படுத்திட வேண்டும் என்பதையும் சற்று ஆராய்வோம்.

இறைவன் மனித வர்க்கத்தில் ஆணையே முதன் முதலில் படைத்தாலும் அவருக்கு துணையாக அவரது மனைவியையும் படைத்து, சுவனபதியில் இருவருக்கும் சம உரிமைகளையே அளித்திருக்கிறார்.

" ஆதாமே! நிச்சயமாக இவன் (ஷைத்தான்) உமக்கும் உம்முடைய மனைவிக்கும் விரோதி ஆவான். உங்களிருவரையும் இச்சோலையிலிருந்து வெளிப்படுத்திவிடாது நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்" (20:117-119)

பின்னர் இருவருமே தவறிழைத்தவர்களாகி, இறைகோபத்திற்கு இருவருமே ஆளாகின்றனர். பின்னர் மன்னிப்புக் கோரவே, கருணையைத் தம்மீது கடமையாக்கிக் கொண்ட இறைவன் அவர்களை மன்னிக்கின்றார்.

குர்ஆன் வசனங்களிலிருந்து இறைவன், முதல் மனிதப் படைப்பின் போதே, ஆண், பெண், இருவருக்கும் சம உரிமைகளை அளித்திருப்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஒருவர் பின் ஒருவராக படைத்தாலும், இருவரையும் சுவனத்தில் சமமாகவே நடத்தியிருக்கிறார். அவர்களுக்கு விலக்கப்பட்ட ஒரே ஒரு மரத்தின் கனியைத் தவிர பிறவற்றை அனைத்தையும் சுதந்திரமாக அனுபவிக்க விட்டிருக்கிறார், என்பதையும் நாம் அறியலாம்.

இருவருமே சமமாகவே சுதந்திரம் அளிக்கப்பட்டனர். இருவரும் சமமாகவே விலக்க வேண்டிய மரம் பற்றி அறிவுறுத்தப் பட்டனர். சமமாகவே தவறிழைத்தனர். இருவரும் சமமாகவே சுவனபதியை விட்டும் வெளியேற்றப்பட்டனர்.

சுவனபதியிலிருந்து வெளியேற்றப்பட்ட இருவரும் பூமியில் குடியேற்றப்படுகின்றனர். அன்று முதல் இறை சட்டதிட்டங்கள் புவி வாழ்வுகேற்றவாறு அந்தந்த காலகட்ட மக்களுக்கேற்றவாறு, ஆகுமானவை, விலக்கப்பட்டவை, என்று இறைவனால் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இறுதி இறைவேதமான குர் ஆன், ஆண் பெண் இருவருக்கும் சமமாகவே, இவற்றை அறிவுறுத்துகிறது. வாழ்வியல் சட்டதிட்டங்களை வெகு தெளிவாக இருவருக்கும் பொதுவானதாக ஆக்கி வைக்கிறது, அவை என்னென்ன என்று காண்போம்.

"விசுவாசங் கொண்ட ஆண்களும் விசுவாசங் கொண்ட பெண்களும் தாம் ஒருவருக்கொருவர் உற்ற தோழர்களாயிருக்கின்றனர். அவர்கள் நன்மை செய்யும்படி தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைக் கடைபிடித்து, ஜகாத் கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும் அவருடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பார்கள் இத்தகையோருக்கு அல்லாஹ் அருள் புரிவார். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவராகவும் ஞானமுடையவராகவும் இருக்கின்றார்." (9:71) இவ்வசனத்தில்

- ❋ நன்மை செய்யுமாறு தூண்டுவதிலும்
- ❋ பாவம் செய்யாமல் தடுப்பதிலும்
- ❋ தொழுகையைக் கடைபிடிப்பதிலும்
- ❋ இறைவனுக்கும் தூதருக்கும் கட்டுப்படுவதிலும்

ஆணையும் பெண்ணையும் சமமாகவே குறிப்பிடுகிறார்.

"விசுவாசங் கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் இறைவன் சுவனபதிகளை வாக்களித்திருக்கின்றார். அவர்கள் அவற்றிலேயே தங்கியும், விடுவார்கள். நித்திய சுவனபதியில் பரிசுத்தமான மாளிகைகளும் உண்டு இறைவனின் திருப்பொருத்தம் மிகப்பெரியது. இது மகத்தான் பெரும் பாக்கியமாகும்" (9:72)

சுவனபதியை இருவருக்கும் பொதுவானதாவே இறைவன் வாக்களிக்கின்றார். ஆனால் ஹதீதுப் புத்தகங்களில் பெண்களில் பெரும்பாலோர் நரகவாசிகளே என்று நாம் காண்கிறோம். இறைவனைவிட தீர்ப்பு வழங்குவதில் மேலானவர் யாரும் இருக்கின்றனரா?

" ஆணாயினும், பெண்ணாயினும் நயவஞ்சகர்கள் அனைவரும் ஒரே இனத்தவரே அவர்கள் பாவமான காரியங்ககளை செய்யும்படி தூண்டுவார்கள் நன்மையான காரியங்களை தடைசெய்வார்கள். தங்கள் கைகளை மூடிக் கொள்வார்கள். இவர்கள் இறைவனை மறந்து விட்டார்கள். இவர்களை இறைவனும் மறந்து விட்டார். நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் தாம் பாவிகள்" (9:67) "நயவஞ்சகரான ஆண்களுக்கும் பெண்களுக்கும், நிராகரிப்போருக்கும் அல்லாஹ் நரக நெருப்பையே வாக்களித்திருக்கின்றார். அதில் அவர்கள்' தங்கிவிடுவார்கள். ஆகவே அவர்களுக்கு போதுமாகும் அன்றி அல்லாஹ் அவர்களை தரித்துமிருக்கிறார். அவர்களுக்கு நிலையான வேதனை உண்டு" (9:68)

- ❋ பாவமான செயல்களை தூண்டுவதிலும்
- ❋ நன்மையான செயல்களை தடுப்பதிலும்
- ❋ உலோபித்தனத்திலும்

நயவஞ்சகர்களை இறைவன் நமக்கு அடையாளம் காட்டுகிறார். இந்த குணாதிசயங்களை உடையவர் ஆணோ, பெண்ணோ இருவருக்கும் நரகமே என்று இறைவன் உறுதியாகக் கூறுகிறார். ஆகையால் பெண்கள் தங்கள் கணவர் சொல்படியே கேட்டு விசுவாசங் கொள்வோம் என்றோ, நிராகரிப்போம் என்றோ பொதுவாக கூறாமல், அவர்களாகவே குர்ஆனை

ஆழ்ந்து படித்து அதன் நுட்பமான சட்டதிட்டங்களை அறிந்து நடந்து கொள்ள முயற்சிகள் செய்ய வேண்டும். கணவரையோ, தந்தையையோ, மகனையோ கேட்டுத்தான் இறைவனையும், குர்ஆனையும் விசுவாசிப்போம் என்று தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்வதை பெண்கள் விட்டுவிட வேண்டும்.

நூஹ் நபியின் மனைவியும், லூத் நபியின் மனைவியும் தங்கள் கணவர்கள் இறை நல்லடியார்களாக இருந்தும், அவர்களுக்கு துரோகம் செய்தனர். இவர்களுக்கு நரகமே என்பதை வசனம் (66:10) அறிகிறோம். 'பிர்அவ்ன்' உடைய மனைவி தன் கணவன் நிராகரிப்பவனாகவும், அநியாயம் செய்பவனாகவும் இருந்த போதிலும் இறை விசுவாசத்தில் மேம்பட்டு வாழ்ந்தார். தன் கணவனுடைய அக்கிரமங்களை விட்டும் தன்னை காத்துக் கொள்ளும்படி இறைவனை வேண்டுகிறார். விசுவாசிகளுக்கு ஒர் உதாரணமாகவே இறைவனால் அடையாளம் காட்டடப்படுகிறார்.

<u>மேலும் இறைவன் 3:195ல் நமக்குக் கூறுகிறார்</u>.

"அவர்கள் இரட்சகன் அவர்களுக்கு பதிலளித்தார். உங்களில் ஆணோ பெண்ணோ அவர் செய்த செயலுக்கு நான் கூலி அளிக்காமல் இருக்க மாட்டேன். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் சமமானவர்களே"

இவ்வாறு பல வசனங்களில் இறைவன் இறைவன் ஆணும், பெண்ணும் ஆத்மரீதியில் சமமே எனக் கூறினாலும் இன்று பெரும்பான்மையான முஸ்லிம் உலகம் பெண்களை இரண்டாம் தரக் குடிமக்களாக இழிவுடன் நடத்துவது அனைவரும் அறிந்த ஒன்றே. இன்றைய முஸ்லிம் பெண்களும் இஸ்லாம் அவ்வாறுதான் கூறுகிறது போலும் என எண்ணி இந்நிலையை ஏற்றுக் கொண்டனர் மெய்யாகவே குர்ஆன், ஆணும் பெண்ணும் சமமே எனக் கூறும் போது ஏன் முஸ்லிம் உலகில் இந்நிலை?

இதற்குக் காரணம் அவர்கள் இறைவன் வழங்கிய வேதத்தைப் புறக்கணித்து அதற்குப் பதிலாக மனிதர்கள் இட்டுக்கட்டிய சொற்களுக்கு (ஹதீஸ்கள்) முன்னுரிமை தந்ததுதான். இந்த ஹதீஸ்கள் பெண்களை மிருகங்களுக்கு, குரங்களுக்கும் கழுதைகளுக்கும், நாய்களுக்கும் ஒப்பாக ஆக்கிவைத்திருக்கிறது.

இறைவன் தன் வேதத்தில் பெண்களுக்கு அளித்திருக்கும் சம உரிமையை, மரியாதையை, வேறு சில மனிதர்கள் எழுதிய புத்தகங்களில் காணப்படும் பொய்கள் பறித்து விட முடியாது. இன்றைய முஸ்லிம்கள் இறைவசனங்களுக்கு மாற்றமாக "பெண்கள் இயற்கையிலும், குணத்திலும், மார்க்கத்திலும் குறைவுள்ளவர்கள்" என்று ஹதீஸ்கள் கூறுவதை நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இது புகாரி சொன்னதாகும். அல்லாஹ் கூறியதல்ல. அல்லாஹ்வின் சொல்லுக்கு மாற்றமாக முஹம்மத் நபி கூறியிருப்பார்களா என்று இவர்கள் சிந்திக்க வேண்டாமா?

பொதுவாக பெண்கள் ஆண்களை விட உடல்பலத்தில் குறைவாக இருப்பதால் இவர்கள் (ஹதீதுகளை நம்புபவர்கள்) பெண்கள் இயற்கையில் குறைவுடையவர்களாக இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். (மாடுகள், எத்தனையோ ஆண்களை விட பலமிக்கதாக இருப்பதால் மாடுகளை விட ஆண்கள் இயற்கையில் குறைவுடையவர்கள் என்று கூறுவார்களா) பெண்கள் இயல்பில் ஆண்களை விட பல வகைகளில் உயர்ந்தவர்களாக இருப்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். உதாரணமாக பெண்கள் வலிகளைத் தாங்கிக் கொள்வதிலும், பத்துமாதம் உடலில் குழந்தையைச் சுமப்பதிலும் ஆண்களின் இயல்பை விட பலமிக்கவர்கள் இல்லையா?

இன்று ஆண்கள் தான் அதிகமாக கொலை, கொள்ளை, கற்பழிப்பு, குழந்தைகளைச் சீரழிப்பது, போன்ற குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இதையெல்லாம் மறந்து விட்டு, பெண்கள் குணத்திலும் குறைபாடுடையவர்கள், என்று இவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இவர்களே மனிதர்களின் சொற்களின் அடிப்படையில் பெண்களை மாதவிடாய் காலத்தில் தொழுவதையும் நோன்பு வைப்பதையும் வெள்ளிக்கிழமைகளில் (கூட்டுத்தொழுகை) பள்ளிக்கு வருவதையும் தடுத்து விட்டு பெண்கள் மார்க்கத்திலும் குறைபாடுடையவர்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இறைவன் கூறுவது இவர்களுக்கு முற்றிலும் மாறானதாகும்.

**யார் நம்பிக்கை கொண்ட நிலையில் நற்செயல்கள் செய்கிறார்களோ- ஆணோ. பெண்ணோ அவர்களுக்கு இவ்வுலகில் மகிழ்ச்சியான வாழ்வையும் மேலும் அவர்களின் நற்செயல்களுக்கு முழுமையான கூலியும் வழங்குவோம். (16:97)**

(தொடரும் ...).

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝١

الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٢

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٣

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٤

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٥

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

# Sura 1 : The Key ( Al-Fātehah)

1 . In the name of God, Most Gracious, Most Merciful.*
2 . Praise be to God, Lord of the universe.
3 . Most Gracious, Most Merciful.
4 . Master of the Day of Judgment.
5 . You alone we worship . You alone we ask for help
6 . Guide us in the right path;
7 . the path of those whom You blessed; not of those who have deserved wrath, nor of the strayers.

## அல்ஃபாத்திஹா-திறவுகோல்

1. கடவுள்-ன் பெயரால், மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்.
2. புகழ்ச்சி கடவுள்-க்குரியது, பிரபஞ்சத்தின் இரட்சகர்.
3. மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்.
4. தீர்ப்பு நாளின் அதிபதி.
5. உம்மை மட்டுமே நாங்கள் வழிபடுகிறோம். உம்மிடம் மட்டுமே
6. நாங்கள் உதவி கோருகிறோம்.
சரியான பாதையில் எங்களை வழி நடத்துவீராக;
7. நீர் ஆசிர்வதித்தவர்களின் பாதையில்;
கோபத்திற்குள்ளானோருடையது அல்ல, வழி
தவறியவர்களுடையதும் அல்ல.

# بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓمّٓ

ذٰ لِكَ الْكِتٰبُ لَا رَيْبَ فِيْهِ هُدًى
لِّلْمُتَّقِيْنَ

الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَ يُقِيْمُوْنَ
الصَّلٰوةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ

وَالَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِمَا اُنْزِلَ اِلَيْكَ
وَمَاۤ اُنْزِلَ مِنْ قَبْلِكَ وَبِالْاٰخِرَةِ هُمْ يُوْقِنُوْنَ

اُولٰٓئِكَ عَلٰى هُدًى مِّنْ رَّبِّهِمْ وَاُولٰٓئِكَ هُمُ
الْمُفْلِحُوْنَ

# Sura 2: The Heifet (Al-Baqarah)

Inthe name of God,
Most Gracious,Most Merciful

1. A.L.M.*
2. This scripture is infallible; a beacon for the righteous

**Three Categories of People**
**(1) The Righteous**

3. Who belive in unseen,observe the Contact Prayers (Salat),* and from our **Provisions to them,they give to charity.
4. And they believe in what was revealed to you, and with regard to the Hereafter, they are absolutely ccrtain
5. These are guided by their Lord; these are the winners

# அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

1. அலிஃப்(அ), லாம்(ல), மீம்(ம).
2. இந்த வேதம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது;
நன்னெறியாளர்களுக்கொரு கலங்கரை விளக்கு

**(முன்ற வகையான மக்கள்)**
**(1) நல்லோ**

3. அவர்கள் கண்களுக்குத் தெரியாதவற்றில் நம்பிக்கை கொள்பவர்கள், (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பவர்கள், மேலும் நம்முடைய** வாழ்வாதாரங்களில், அவர்களுக்குரியவற்றிலிருந்து, தர்மத்திற்கென அவர்கள் கொடுப்பார்கள்.
4. மேலும் அவர்கள், உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றிலும், உமக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டவற்றிலும் நம்பிக்கை கொள்கின்றனர், மேலும் மறுவுலகைக் குறித்து, அவர்கள் பரிபூரண உறுதியுடன் இருக்கின்றனர்.*
5. இவர்கள்தான் தங்களுடைய இரட்சகரால் வழிநடத் தப்பட்டவர்களாக இருக்கின்றனர்; இவர்கள்தான் வெற்றி பெற்றவர்களாகவும் இருக்கின்றனர்.

## வாசகர்கள் கவனத்திற்கு

அன்புள்ள வாசகர்களே, புதிய நினைவூட்டல் என்ற இந்த மாத இதழ் இலாப நோக்கின்றி இறை வழியில் மனிதர்களுக்கு, சேவை செய்வதற்காக மட்டுமே ஆரம்பித்து நடத்தப்படுகிறது. இதற்கு நீங்கள் சந்தா செலுத்தி வாங்கி பயனடையுங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்களின் பெயர்களுக்கும் சந்தா செலுத்தி பயனடையச் செய்யுங்கள்.

## கேள்வி - பதில் பகுதி

அடுத்த இதழில் கேள்வி பதில் பகுதி தொடங்குகிறது. வாசகர்களின் கேள்வி களுக்கு அல்குர்- ஆன் ஒளியில் பதில்கள் தரப்படும். இறைவனின் நாட்டப்படி."

“ பூமி தட்டையானது!” என்று தீர்ப்பு வழங்கிய ஹதீஸ் கலை பேராசிரியர், மதீனா பல்கலை கழக முஃப்தி வழங்கிய தீர்ப்பின் நகல்:

As recently as 1975, and in the same location where the Quran was revealed, the president of the Islamic University of Medina, Saudi Arabia, Sheikh Abdul Aziz Ben Baz, declared that the earth is flat and standing still (see insert)!!

من مطبوعات الجامعة الاسلامية
بالمدينة المنورة ١٣٩٥ هـ

الأدلة النقلية والحسية
على جريان الشمس وسكون الأرض

عبد العزيز بن باز

ولو كانت الأرض تدور كما
يزعمون لكانت البلدان ، والجبال ، والأشجار ، والأنهار ، والبحار
لا قرار لها ، ولشاهد الناس البلدان الغربية في المشرق ، والمشرقية في المغرب ؛
ولتغيرت القبلة على الناس حتى لا يقر لها قرار

Translation from Ben Baz’ book, Page 23: “ If the earth is rotating as they claim, the countries, the mountains,the trees,the rivers,and the oceans will have no bottom and the people will see the eastern countries move to the west and the western countires move ot the east.”



# பிரகடனம்



பால்வீதி, அம்புக்குறி காட்டும் புள்ளி சூரிய மண்டலம்!

அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்

அல்குர்-ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே

இறுதி வேதம். அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சி களை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது

இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும் அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.

எல்லா இறை தூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.

முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662